தேசிய தாவரவியல் பூங்காக்கள் திணைக்களம்

# வருடாந்த முன்னேற்ற அறிக்கை
# 2016

தேசிய தாவரவியல் பூங்காக்கள் திணைக்களம்
த.பெ.14, பேராதனை.

# உள்ளடக்கம்


| | | |
|---|---|---|
| 1. | அறிமுகம் | 03 |
| 2. | 2016 ம் ஆண்டின் முன்னேற்றம் | 09 |
| 3. | வருமானம் | 11 |
| 4. | நிதிச் செலவு முன்னேற்றம் | 12 |
| 5. | 2016 ம் ஆண்டில் தாவரவியல் பூங்காக்களின் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களின் முன்னேற்றம் | 16 |
| 6. | திணைக்களத்தின் கீழான ஏனைய அலகுகளின் முகாமை | 34 |
| 7. | 2016 ம் ஆண்டில் இடம்பெற்ற உள்ளக இட மற்றம், சம்பள உயர்வு, ஏனைய விடயங்கள் | 35 |
| 8. | பணியாளர் பயிற்சி மற்றும் இயலுமை விருத்தி | 37 |
| 9. | 2017ம் ஆண்டுக்கான எதிர்காலத் திட்டங்கள் | 39 |

## 1.அறிமுகம்

தேசிய தாவரவியல் பூங்காக்கள் திணைக்களமானது, தாவரவியல் நடவடிக்கைகள் தொடர்பிலான இலங்கையின் முன்னோடி நிறுவனமாகும். தாவர வெளிவாரிப் பேணுகை, தாவரங்கள் குறித்த கல்விச் செயற்பாடுகள், இலங்கையில் அலங்காரப் பூங்காவியலை ஊக்குவிப்பதற்கான ஆய்வு ரீதியான மற்றும் தொழில்நுட்ப ரீதியான நிகழ்ச்சித் திட்டங்கள், பூச்செடியியல் ஆய்வு மற்றும் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களை நடைமுறைப்படுத்துதல் உள்ளிட்ட பணிகளுக்கு பெரும் பங்களிப்பினைச் செய்வதோடு, உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளைக் கவரும் இடமாகவும் திகழ்கிறது.

பிரித்தானியர் காலத்தில் ஆரம்பிக்கப்பட்ட பிரதான பூங்காக்களான பேராதனை அரச தாவரவியல் பூங்கா (1821), ஹக்கல தாவரவியல் பூங்கா (1861), கம்பஹா, ஹெனரத்கொட தாவரவியல் பூங்கா (1876) மற்றும் 1950 களில் ஆரம்பிக்கப்பட்ட கனேவத்த மூலிகைத் தாவரப் பூங்கா ஆகியவற்றோடு முறையே 2013, 2015 ம் ஆண்டுகளில் ஆரம்பிக்கப்பட்ட அம்பாந்தோட்டை, மிரிஜ்ஜவில உலர் வலய தாவரவியல் பூங்கா மற்றும் அவிசாவலை சீதாவக ஈர வலய தாவரவியல் பூங்கா ஆகியன பொது மக்களுக்காகத் திறந்து வைக்கப்பட்டுள்ளன.

தேசிய தாவரவியல் பூங்காக்கள் திணைக்களத்தின் கீழ் நிர்வகிக்கப்படுகின்ற தாவரவியல் பூங்காக்களில் 4500 க்கும் மேற்பட்ட தாவரவகைகள் பேணப்படுவதோடு அரிய வகைத் தாவரங்கள், காடுகளிலிருந்து அழிந்து போயுள்ள தாவரங்கள் இலங்கைக்கு மாத்திரம் உரிய தாவரங்கள், அழிவுறும் ஆபத்துக்கு உட்பட்டுள்ள தாவரங்கள் ஆகியன பாதுகாக்கப்பட்டுள்ளன. அத்தோடு கனேவத்த மூலிகைத் தாவரப் பூங்கா இலங்கையின் மூலிகைத் தாவரங்களின் பாதுகாப்புக்கும் பரவுகைக்கும் பங்களிப்புச் செய்கின்றது.

இத்திணைக்களத்தின் தேசிய தாவரக்கயம் தாவர சான்றுப்படுத்தல் பணிகளையும் தாவர வகைப்படுத்தல் குறித்த ஆய்வு நிகழ்ச்சித் திட்டங்களையும் தாவரவியல் விஞ்ஞானத்தின் ஏனைய பணிகளையும் மேற்கொள்கின்றது. பூச்செடிச் செய்கை ஆய்வு மற்றும் அபிவிருத்தி அலகானது பூச்செடிச் செய்கை ஆய்வுகளில் ஈடுபடுவதன் மூலம் நாட்டில் பூச்செடிச் செய்கைக்கான வர்த்தக வாய்ப்புக்களை ஊக்குவிக்கும் பணியை பல்வேறு ஊடகங்கள், பணிகள், நிகழ்ச்சித்திட்டங்கள் மூலம் ஊக்குவிக்கிறது. இத்திணைக்களத்தின் கல்வி மற்றும் பயிற்சி நிலையமானது, குறுங்கால கற்கை நெறிகள், 1 வருட மற்றும் 2 வருட டிப்ளோமா கற்கை நெறிகள் ஆகியனவற்றை வழங்குகின்றது.

தாவரவியல் பூங்காக்களானவை, ஓய்வெடுத்தலுக்கான வசதிகளை வழங்குவதோடு, உலகின் பல பகுதிகளிலிருந்தும் தருவிக்கப்பட்ட அதன் தாவரங்கள் தாவர இராச்சியத்தின் அழகையும் பன்மைத்துவத்தையும் பறை சாற்றுகின்றன. அத்தோடு தாவரப் பேணுகை, உயிரியல் பல்வகைமை, பூச்செடிச் செய்கை பற்றிய அறிவையும் பகிர்கின்றது

### 1.2 . நோக்கு

தாவரவியல் மற்றும் அழகியல் நடவடிக்கைகளை உயர் மட்டத்தில் பேணிக்கொண்டு அயன வலயத்தின் மிகச் சிறந்த தாவரவியல் பூங்காவாக மாறுதல்.

### 1.3. பணி

இயற்கையான மற்றும் செயற்கையான சூழல்களில் காணப்படும் தாவர வளங்கள் பற்றி ஆய்வு செய்தல், அவற்றின் நிலையான பேணுகை மற்றும் அவற்றின் மதிப்பை அறிந்து கொள்ளும் பணிகளுக்காக பொது மக்களுக்கு சந்தர்ப்பங்களை ஏற்படுத்திக் கொடுப்பதோடு அவர்களை தாவரங்கள் பால் சமீபமாக்குதல்.

### 1.4 திணைக்களத்தின் பிரதான பணிகள்

1. இலங்கையின் தாவரவியல் பல்வகைத் தன்மையினை பாதுகாப்பதில் வெளிவாரிப் பாதுகாப்பு முறைகளை செயல்வலுப் பெறச் செய்தல் தொடர்பில் தேவையான திட்டங்களை வகுத்தலும் செயல்படுத்தலும்

2. கல்வி மற்றும் தொடர்பாடல் முறைகளை பயன்படுத்தி இலங்கையின் தாவர வளங்கள் சம்பந்தமாகவும் தாவர வளங்களுடன் தொடர்புற்றுக் காணப்படும் பல்வேறு வகையான கைத்தொழில் நடவடிக்கைகளுக்கு தேவைப்படும் சரியான தகவல்களையும் கலையறிவினையும் வழங்குவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.

3. இலங்கையில் பூச்செடிச் செய்கைக் கைத்தொழிலை அபிவிருத்தி செய்வதற்குத் தேவையான பல்வேறு ஆராய்ச்சிகள் மற்றும் தொழில் நுட்ப முறைகளை பரீட்சித்தலும் செயல்படுத்துதலும்.

4. இலங்கையின் தேசிய தாவரவியல் பூங்காக்களை உயர்தரத்தில் பராமரித்துப் பேணல்.

5. பொருத்தமான இடங்களில் புதிய தாவரவியல் பூங்காக்களை உருவாக்குவதற்குத் தேவையான அபிவிருத்தித் திட்டங்களைத் தயாரித்தலும் செயல்படுத்தலும்

6. அலங்கார தாவரவியல் ஆய்வினை இலங்கையில் விஸ்தரிப்பதற்குத் தேவையான ஆராய்ச்சிகள் மற்றும் தொழில்நுட்ப வேலைத்திட்டங்களை அமுலாக்குதல்.

7. இலங்கையின் அடையாளம் காணப்பட்ட வரலாற்று முக்கியத்துவம் மிக்க தாவரங்களை பாதுகாப்பதற்குத் தேவைப்படும் தொழில் நுட்ப ஆலோசனைககளை வழங்குதல்.

8. அநுராதபுரம் புனித அரச மரத்தின் ஆரோக்கியத்தைப் பேணுதல்.

## 1.5 பணியாளர்கள் பற்றிய விபரம்

திணைக்களத்துக்கான அனுமதிக்கப்பட்ட மொத்தப் பணியாளர் எண்ணிக்கை 775 ஆகும். 2016.12.31 ம் திகதிக்கு 648 பேர் பணியில் ஈடுபட்டுள்ளனர். அது பற்றிய சாராம்சம் வருமாறு:

### 1.5.1 2016.12. 31ம் திகதிக்கு திணைக்களத்தின் பணியாளர் எண்ணிக்கை பற்றிய விபரம்

| சேவை வகை | சம்பள முறைமை | சேவை / பதவி | அனுமதிக்கப்பட்ட பணியாளர் எண்ணிக்கை | தற்போதுள்ள எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| சிரேஷ்ட மட்டம் | SL – 3<br>SL- 1 | இ.வி.சே.<br>இ.நி.சே.<br>இ.கண.சே.<br>இ.பொறி.சே.<br>இ.க.க.சே. | 33 | 14 |
| மூன்றாம் நிலை | MN – 7<br><br>MN – 6 | நிர்வாக அலுவலர்<br>இ.தொ.நு.சே./ விஷேச தரம்<br>மொழிபெயர்ப்பாளர் | 10 | 05 |
| இரண்டாம் நிலை | MN – 4<br><br>MN – 3<br><br><br><br><br>MN – 2<br>MN – 1<br>MT – 1 | நிகழ்ச்சித்திட்ட உதவியாளர்<br>விவசாய நடவடிக்கை அலுவலர்<br>அபிவிருத்தி அலுவலர்<br>விவசாய ஆலோசகர்<br>பூங்கா அபிவிருத்தி உதவியாளர்<br>ஆய்வு உதவியாளர்<br>செவிப்புல, கட்புல உதவியாளர்<br>தொழில்நுட்ப அலுவலர்<br>அரச முகாமைத்துவ சேவை<br>கட்டண அறவீட்டு உதவியாளர்<br>தகவல் தொழில் நுட்ப உதவியாளர்<br>பூங்கா வேலை மேற்பார்வையாளர் | 186<br><br><br><br>இலங்கை தொழில் நுட்ப சேவை | 135 |
| ஆரம்ப நிலை | PL – 3 | தேர்ச்சி பெற்ற | 556 | 494 |

| சேவை வகை | சம்பள முறைமை | சேவை / பதவி | அனுமதிக்கப்பட்ட பணியாளர் எண்ணிக்கை | தற்போதுள்ள எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| | PL – 2<br>PL – 1 | பகுதி தேர்ச்சி பெற்ற<br>தேர்ச்சி அற்ற | | |
| மொத்தம் | | | 785 | 648 |

### 1.5.2. திணைக்களத்தின் சிரேஷ்ட நிலை அலுவலர்கள்

| பதவி | அலுவலர் பெயர் |
|---|---|
| பணிப்பாளர் நாயகம் | திரு. கே. என். யாபா |
| பணிப்பாளர் (அபிவிருத்தி) | திருமதி. எச். சீ. பீ. சந்திரிகா ஜயவீர |
| பணிப்பாளர்(ஆராய்ச்சி மற்றும் தொழில் நுட்ப மாற்றீடு) | கலாநிதி, செல்வி. ஷெலோமி ஏ. கிருஷ்ணராஜா |
| பணிப்பாளர் (நிர்வாகம்) | திருமதி. ஐ. டபிள்யு. எம். சீ. கே. இலங்ககோன் |
| பிரதம கணக்காளர் | திரு. டபிள்யு. டீ. யூ. டீ மெல் |
| சிவில் பொறியியலாளர் | திரு. ஏ. எல். எம். மாஹிர் |
| பிரதம உள்ளக கணக்காய்வாளர் | திருமதி. என். டீ. லியனகே |
| உதவிப் பணிப்பாளர் (நிர்வாகம்) | திரு. வை. எம். வை. யாபா பண்டார |
| நிர்வாக அலுவலர் | திரு. என். டபிள்யு. யூ.ஆர். ஜயலத் |

### 1.5.3. திணைக்களத்தின் ஏனைய சிரேஷ்ட நிலை அலுவலர்கள்

| பதவி | அலுவலர் பெயர் |
|---|---|
| பிரதிப் பணிப்பாளர், அரச தாவரவியல் பூங்கா | கலாநிதி, திருமதி. ஏ.எம்.ஏ.எஸ். அத்தநாயக |
| பிரதிப் பணிப்பாளர் (பூச்செடியியல் ஆய்வு ) | திரு. எம்.எம்.டீ.ஜே. சேனாரத்ன |
| உதவிப் பணிப்பாளர், கம்பஹா தாவரவியல் பூங்கா | திருமதி. எம்.சீ. விக்ரமசிங்ஹ |
| உதவிப் பணிப்பாளர் (நாரஹேன்பிட உதவிப் பணிப்பாளர் அலுவலகம்) | திருமதி. ஆர்.எஸ்.டபிள்யு. கோமஸ் |
| பிரதிப் பணிப்பாளர் (தேசிய தாவரக்கயம்) | திருமதி. ஆர்.எஸ்.டபிள்யு. ரணசிங்ஹ |
| உதவிப் பணிப்பாளர், சீதாவக ஈரவலய தாவரவியல் பூங்கா | திரு. பீ.டீ.எஸ். விஜேரத்ன |

## 1.6 நிறுவனக் கட்டமைப்பு



## 1.7 இத்திணைக்களத்தின் கீழ் இயங்கும் நிறுவனங்களும் அலகுகளும்

**அரச தாவரவியல் பூங்கா, பேராதனை**

1821ல் நிறுவப்பட்ட பேராதனை, அரச தாவரவியல் பூங்காவானது தாவரப் பேணுகை, மக்களுக்குக் கல்வியூட்டல் மற்றும் இலங்கையின் பொருளாதார, சூழலியல் அபிவிருத்திப் பணிகளுக்குப் பெரும் பங்காற்றுகின்றது.

கண்டி நகருக்கு அண்மையில் 61.25 ஹெக்டெயார் நிலப்பரப்பில் அமைந்துள்ள இப்பூங்காவானது, கல்வி, தாவரவியல் ஆய்வு, சூழலியல் மற்றும் அலங்காரப் பூங்காவியல் நிலையமாகவும் மக்களுக்கு ஓய்வளிக்கும் இடமாகவும் திகழ்கின்றது.

**தேசிய தாவரக்கயம் - பேராதனை**

இலங்கையினதும் மற்றும் வெளிநாடுகளதும் தாவரங்களின் உலர்ந்த தாவரக்கய மாதிரிகளை முறையான ஆய்வுகளுக்காக பாதுகாத்து வைக்கும் இடமே தேசிய தாவரவக்கயமாகும். இங்கு 160,000 க்கும் அதிகமான தாவரக்கய மாதிரிகள் பாதுகாத்து வைக்கப்பட்டுள்ளன. அத்தோடு தாவரங்கள் பற்றிய 3500 க்கும் மேற்பட்ட புத்தகங்களும் சஞ்சிகைகளும் இதன் நூலகத்தில் சேமித்து வைக்கப்பட்டுள்ளன.

தாவரக்கயத்தில் சேமித்து வைக்கப்பட்டுள்ள மாதிரிகள் தாவர வகைப்படுத்தல் ஆய்வுகளுக்காகவும் உயிரினப் பல்வகைமைத் தரவு வங்கியொன்றாக தாவரங்களை அடையாளம் காணும் பணிகளுக்காகவும் பயன்படுத்தப்படுகின்றன.

**ஹக்கல தாவரவியல் பூங்கா, ஹக்கல**

ஹக்கல தாவரவியல் பூங்கா 1861 இல் உருவாக்கப்பட்டது. இப்பூங்காவின் தாவரங்கள் உப அயன வலயத்துக்குரியவையாகும். இங்கு உள்நாட்டுத் தாவரங்கள், மலைத் தாவரங்கள், ஏனைய உப அயன வலய நாடுகளிலிருந்து அறிமுகப்படுத்தப்பட்ட தாவரங்கள் ஆகியன முறையாக நடப்பட்டுள்ளன.

**ஹெனரத்கொட தாவரவியல் பூங்கா -கம்பஹா**

கம்பஹா, ஹெனரத்கொட தாவரவியல் பூங்கா 1876ல் றப்பர் பயிர்ச் செய்கையை இலங்கையில் ஊக்குவிப்பதற்காக ஆரம்பிக்கப்பட்டது. 17.4 ஹெக்டெயார் பரப்பைக் கொண்ட இப்பூங்கா வளமான வரலாற்றைக் கொண்டதும் தாவரவியல் மற்றும் அலங்காரப் பூச்செடியியல் கவர்ச்சியைக் கொண்டதுமாகும். இது இலங்கையையும் வெளிநாடுகளையும் சேர்ந்த 2000த்துக்கும் அதிகமான தாவர வகைகளைக் கொண்டு காணப்படுகின்றது.

**பூச் செடிச் செய்கை ஆய்வு மற்றும் அபிவிருத்திப் பிரிவு, பேராதனை.**

பூச்செடிச் செய்கைத் துறையோடு தொடர்பான ஆய்வுகளைச் செய்து இலங்கையின் பூச்செடிச் செய்கைத் துறையின் அபிவிருத்திக்குப் பங்களிப்பது இவ்வலகின் பணியாகும்.

பயிற்சி நிகழ்ச்சிகளையும் கள ஆலோசனைகளையும் இத்துறையில் முதலீடு செய்வதற்கான வாய்ப்புக்கள் குறித்த தகவல்களையும் வழங்குவதிலும் பொருட்கள், உபகரணங்கள், தரமான உற்பத்தி சாதனங்கள் ஆகியனவற்றை பூ வளர்ப்போருக்கு வழங்குவதிலும் மாவட்ட மட்டத்தில் பூ வளர்ப்போர் சங்கங்களை அமைத்து அத்துறையின் வளர்ச்சிக்குப் பங்களிப்பதிலும் இப்பிரிவு முனைப்போடு ஈடுபடுகின்றது.

**மூலிகைப் பூங்கா, கனேவத்த**

இப்பூங்காவானது வடமேல் மாகாணத்தில் குருநாகல் மாவட்டத்தில் அமைந்துள்ளது. 21.04 ஹெக்டெயார் பரப்புக் கொண்ட இப்பூங்காவில் பல வகைகளையும் சார்ந்த மூலிகைகள் பயிரிடப்பட்டுள்ளன.

இலகுவில் பெற்றுக் கொள்ள முடியாத, அரிய மூலிகைகளை பேணிப்பாதுகாப்பதும் மருந்து மூலிகைகளை முறையாக வளர்த்துச் சேமிப்பதும் இப்பூங்காவின் நோக்கங்களாகும். அத்தோடு மூலிகை விற்பனையிலும் முறையான மூலிகை வளர்ப்புப் பற்றிய அறிவை வழங்குவதிலும் இது ஈடுபடுகிறது.

**உலர் வலய தாவரவியல் பூங்கா, மிரிஜ்ஜவில, அம்பாந்தோட்டை**

இப்பூங்காவானது 130 வருடங்களுக்குப் பிறகு உள்நாட்டு நிபுணர்களால் வடிவமைக்கப்பட்ட இலங்கையின் முதலாவது பூங்காவாகும். இது தென் மாகாணத்தில் அம்பாந்தோட்டை மாவட்டத்தில் மிரிஜ்ஜவில பகுதியில் அமைந்துள்ளது. 2006ம் ஆண்டில் இதன் அபிவிருத்திப்பணிகள் ஆரம்பிக்கப்பட்டு 2013ம் ஆண்டு பொதுமக்களுக்காகத் திறந்து வைக்கப்பட்டது.

உலர் மற்றும் அதி உலர் வலயத் தாவரங்களை வெளிவாரிப் பேணுகை முறைமையின் கீழ் பாதுகாப்பதும் உள் நாட்டுப் பொருளாதார அபிவிருத்திக்குப் பங்களிப்பதும் இதன் பிரதான குறிக்கோளாகும்.

**சீத்தாவாக்கை ஈரவலய தாவரவியல் பூங்கா**

அவிசாவலைக்கு அண்மையில் அமைந்துள்ள இதன் அபிவிருத்திப் பணிகள் 2008ம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டதோடு, 2015ம் ஆண்டு மார்ச் மாதம் திறந்து வைக்கப்பட்டது. இது 42.49 ஹெக்டெயார் பரப்பளவைக் கொண்டது.

ஈர வலய தாழ் நிலத் தாவரங்களை வெளிவாரிப் பேணுகை முறை மூலம் பாதுகாப்பது இதன் பிரதான குறிக்கோளாகும்.

**சுவஹஸ் மல் செவன, கொழும்பு**

நாரஹேன்பிடவில் அமைந்துள்ள இவ்வலகானது, இலங்கையின் பல்வேறு பகுதிகளிலும் இயங்கும் 'சுவஹஸ்மல்' சங்கங்களின் அங்கத்தவர்களால் உற்பத்தி செய்யப்படும் பூச்செடியியல் உற்பத்திகளை சந்தைப்படுத்துதல் மற்றும் தொழில்நுட்பப் பரிவர்த்தனை ஆகிய பணிகளை மேற்கொள்கிறது.

**அதி மேதகு ஜனாதிபதி மற்றும் மாண்பு மிகு பிரதமர் ஆகியோரது வாசஸ்தலப் பூங்காக்கள்**

அதி மேதகு ஜனாதிபதி அவர்களின் கொழும்பு, கண்டி, நுவரெலியா, அனுராதபுர வாசஸ்தலங்களின் பூங்காக்கள் மற்றும் மாண்பு மிகு பிரதமர் அவர்களின் கொழும்பு மற்றும் நுவரெலியா வாசஸ்தலங்களின் பூங்காக்கள் இத்திணைக்களத்தால் நிர்வகிக்கப்படுகின்றன.

**பொதுநலவாய போர் சமாதிகள்**

பொது நலவாய போர் சமாதிகள் கண்டி, ஜாவத்தை, பொரல்ல மற்றும் திருகோணமலை ஆகிய பகுதிகளில் இரண்டு உலகப் போர்களிலும் இறந்த பொது நலவாய நாடுகளின் போர் வீரர்களை நினைவு கூரும் பொருட்டு அமைக்கப்பட்டுள்ளன. இவை இத்திணைக்களத்தாலேயே நிர்வகிக்கப்படுகின்றன.

**பசுமை நிலையம், மீகல்லாவ**

மீகல்லாவ பசுமை நிலையமானது வடமேல் மாகாணத்தில், குருனாகலையிலிருந்து 96.56 கி.மீ. தூரத்தில் அமைந்துள்ளது. தற்போது இது 2.43 ஹெக்டெயார் விஸ்தீரணம் கொண்டது. அபிவிருத்தி செய்யப்பட்டு வருகின்ற இந்நிலையமானது பூச்செடியியல் துறையில் இத்திணைக்களத்தின் உள்ளகப் பணியாளர்களுக்கும் பிரதேசப் பொதுமக்களுக்குமான பயிற்சி வழங்குவதற்கும் தாவர உற்பத்தி செய்தற்குமான நிலையமாக செயற்படவுள்ளது.

# 2. 2016ம் ஆண்டில் அடைந்த முன்னேற்றம்

## 2.1 பார்வையாளர் வருகை

2016ம் ஆண்டில் தேசிய தாவரவியல் பூங்காக்கள் திணைக்களத்தின் அனைத்து அலகுகளும் உயர் தரத்தில் பேணப்பட்டன.

இவ்வருடத்தில் பூங்காக்களைப் பார்வையிட வருகை தந்த மொத்தப் பார்வையாளர்கள் எண்ணிக்கை 3,058,657 ஆகும். இவர்களுள் 2,593,252 உள்நாட்டவர்களும் 465,405 வெளிநாட்டவர்களும் அடங்குகின்றனர்.

கடந்த வருடத்துடன் ஒப்பிடுகையில் உள்நாட்டுப் பார்வையாளர்களின் வருகை 17 % வீதத்தாலும் வெளிநாட்டுப் பார்வையாளர் வருகை 14 % வீதத்தாலும் அதிகரித்துள்ளது.

## 2.2. 2016ம் ஆண்டில் பூங்காக்களைப் பார்வையிட வந்தோர் எண்ணிக்கை




**பூங்காக்களைப் பார்வையிட வந்த உள்நாட்டு, வெளிநாட்டுப் பார்வையாளர் எண்ணிக்கை**




2015 மற்றும் 2016 ம் ஆண்டுகளில் பூங்காக்களைப் பார்வையிட வந்த உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுப் பார்வையாளர்களின் எண்ணிக்கை ஒப்பீட்டு அடிப்படையில்

## 2.3. 2012ம் ஆண்டு முதல் 2016ம் ஆண்டு வரை தாவரவியல் பூங்காக்களுக்கான பார்வையாளர் வருகை

| விபரம் | ஆண்டு | | | | |
|---|---|---|---|---|---|
| | 2012 | 2013 | 2014 | 2015 | 2016 |
| உள்நாட்டுப் பார்வையாளர்கள் | 1,931,914 | 1,783,069 | 1,893,522 | 2,215,702 | 2,593,252 |
| வெளிநாட்டுப் பார்வையாளர்கள் | 259,545 | 293,454 | 345,468 | 407,553 | 465,405 |
| மொத்தம் | **2,191,459** | **2,076,523** | **2,238,990** | **2,623,255** | **3,058,657** |

## 2.4. 2016ம் ஆண்டு பூங்காக்களைப் பார்வையிட வந்த எண்ணிக்கை

| பார்வையாளர் எண்ணிக்கை | பேராதனை | ஹக்கல | கம்பஹா | மிரிஜ்ஜவில | சீதாவக | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|
| உள்நாடு - வளர்ந்தோர் | 882,704 | 699,016 | 195,931 | 37,053 | 123,857 | 1,938,561 |
| உள்நாடு - சிறுவர்கள் | 309,049 | 243,508 | 18,013 | 23,280 | 24,337 | 618,187 |
| சிரேஷ்ட பிரஜைகள் | 14,480 | 14,291 | 887 | 2,158 | 4,688 | 36,504 |
| மொத்த உள்நாட்டுப் பார்வையாளர் | 1,206,233 | 956,815 | 214,831 | 62,491 | 152,882 | 2,593,252 |
| வெளிநாடு - வளர்ந்தோர் | 407,031 | 25,505 | 335 | 109 | 131 | 433,111 |
| வெளிநாடு - சிறுவர்கள் | 21,091 | 2,206 | 11 | 10 | 2 | 23,320 |
| வெளிநாடு - மாணவர்கள் | 7,455 | 1,481 | 19 | 19 | - | 8,974 |
| மொத்த வெளிநாட்டுப் பார்வையாளர் | 435,577 | 29,192 | 365 | 138 | 133 | 465,405 |
| மொத்தப் பார்வையாளர்கள் | 1,641,810 | 986,007 | 215,196 | 162,629 | 153,015 | 3,058,657 |

## 3. வருமானம்

2016ம் ஆண்டில் நுழைவுக் கட்டணம், தாவர விற்பனை என்பன மூலம் திணைக்களம் பெற்றுக்கொண்ட மொத்த வருமானம் 784.4 மில்லியன் ரூபாய்களாகும். (பார்வையாளர்கள் மூலம் 709.7 மில்லியன் ரூபாய்களும் தாவர விற்பனை மற்றும் ஏனைய வருமானங்கள் மூலம் 74.7 மில்லியன் ரூபாய்களும் வருமானமாகப் பெறப்பட்டன.) கடந்த வருடத்துடன் ஒப்பிடுகையில் இது 36% அதிகரிப்பாகும்.

### 3.1. 2012ம் ஆண்டு முதல் 2016ம் ஆண்டு வரை பார்வையாளர்கள் மூலம் மாத்திரம் திணைக்களத்துக்குக் கிடைத்த மொத்த வருமானம்.

| விபரம் | ஆண்டு | | | | |
|---|---|---|---|---|---|
| | 2012 | 2013 | 2014 | 2015 | 2016 |
| **உள்நாட்டுப் பார்வையாளர்கள் மூலம் கிடைத்த வருமானம் (ரூ. மில்.)** | 77.6 | 73 | 75.9 | 88.5 | 115.4 |
| **வெளிநாட்டுப் பார்வையாளர்கள் மூலம் கிடைத்த வருமானம் (ரூ. மில்.)** | 279 | 314.9 | 369.8 | 435.1 | 594.3 |
| **மொத்தம் (ரூ. மில்.)** | **356.6** | **387.9** | **445.7** | **523.6** | **709.7** |

### 3.2. 2016ம் ஆண்டு திணைக்களத்தின் மொத்த வருமானம் அலகு ரீதியாக

| அலகு | மொத்த வருமானம் (ரூ.) |
|---|---|
| அரச தாவரவியல் பூங்கா, பேராதனை | 642,796,438.28 |
| தாவரவியல் பூங்கா, ஹக்கல | 90,409,862.61 |
| தாவரவியல் பூங்கா, கம்பஹா | 23,844,169.00 |
| மூலிகைப் பூங்கா, கனேவத்த | 1,189,193.70 |
| உலர் வலய தாவரவியல் பூங்கா, மிரிஜ்ஜவில | 6,677,339.10 |
| ஈர வலய தாவரவியல் பூங்கா, அவிசாவலை | 19,184,166.00 |
| "சுவஹஸ் மல் செவன" நாற்று மேடை, நாரஹேன்பிட | 170,305.00 |
| மீகல்லாவ பசுமை நிலையம் | 115,925.00 |
| **மொத்தம்** | **784,387,398.69** |

## 4. நிதி முன்னேற்றம்

பிரதான பூங்காக்களிலும் ஏனைய அலகுகளிலும் அபிவிருத்திப் பணிகள் திட்டமிட்டபடி மேற்கொள்ளப்பட்டதோடு 2016ம் ஆண்டிற்கான திணைக்களத்தின் நிதி முன்னேற்றம் 99.6.% ஆகும். 2016ம் ஆண்டில் திணைக்களம் பெற்றுக்கொண்ட மொத்த வருமானம் 784.4 மில்லியன் ரூபாய்களாகும். மொத்தச் செலவு 649.5 மில்லியன் ரூபாய்களாகும். அதன் படி 2016ம் ஆண்டில் திணைக்களத்தின் மொத்தச் செலவு அதன் மொத்த வருமானத்தை விட அதிகரிக்காத அதேவேளை 134.9 மில்லியன் ரூபா சேமிப்பை (இலாபத்தை) காட்டுகிறது.

### 4.1. 2016ம் ஆண்டின் செலவு விபரம்

| விபரம் | மொத்த ஒதுக்கீடு (ரூ. மில்.) | மொத்தச் செலவு (ரூ. மில். ) | % |
|---|---|---|---|
| **மூலதனச்செலவு** | 302.8 | 300.8 | 99.3 |
| **மீண்டெழும் செலவு** | 349.515 | 348.744 | 99.8 |
| **மொத்தம்** | **652.315** | **649.544** | **99.6** |

### 4.2. மீண்டெழும் செலவு

| விடயக் குறியீடு | விபரம் | 2016 க்கான ஒதுக்கீடு (ரூ.) | 2016 நிகர செலவு (மேலதிக தொகையைக் கழித்த பின்னர்) (ரூ.) | மீதமுள்ள ஒதுக்கீடு (ரூ.) | மொத்தச் செலவு ஒதுக்கீட்டின் % மாக |
|---|---|---|---|---|---|
| | ஆட்களுக்கான கொடுப்பனவுகள் | **294,060,000.00** | **293,862,206.58** | **197,793.42** | **100** |
| 1001 | சம்பளங்களும் வேதனங்களும் | 132,166,000.00 | 131,968,945.13 | 197,054.87 | 100 |
| 1002 | மேலதிக நேர வேலை மற்றும் விடுமுறைக் கொடுப்பனவு | 5,450,000.00 | 5,449,323.26 | 676.74 | 100 |
| 1003 | வேறு கொடுப்பனவுகள் | 15,6444,000.00 | 15,6443,939.19 | 61.81 | 100 |
| | பிரயாணச் செலவுகள் | **1,800,000.00** | **1,798,704.71** | **1295.29** | **100** |
| 1101 | உள்நாடு | 1,435,000.00 | 1,433,825.66 | 1,174.34 | 100 |
| 1102 | வெளிநாடு | 365,000.00 | 364,879.05 | 120.95 | 100 |
| | வழங்கல்கள் | **8,821,530.00** | **8,377,927.18** | **443,602.82** | **95** |
| 1201 | காகிதாதிகளும் அலுவலகத் தேவைகளும் | 700,000.00 | 699,515.78 | 484.22 | 100 |
| 1202 | எரிபொருள் | 3,280,25.00 | 2,841,634.15 | 438,990.85 | 87 |
| 1203 | உணவு, பானம், சீருடை | 250,000.00 | 249,517.00 | 483.00 | 100 |
| 1205 | வேறு | 4,590,905.00 | 4,587,260.25 | 3,644.75 | 100 |

| விடயக் குறியீடு | விபரம் | 2016 க்கான ஒதுக்கீடு (ரூ.) | 2016 நிகர செலவு (மேலதிக தொகையைக் கழித்த பின்னர்) (ரூ.) | மீதமுள்ள ஒதுக்கீடு (ரூ.) | மொத்தச் செலவு ஒதுக்கீட்டின் % மாக |
|---|---|---|---|---|---|
| | இயக்கச் செலவு | **2,850.000.00** | **2,848,652.55** | **1,347.45** | **100** |
| 1301 | வாகனம் | 2,000,000.00 | 1,999,432.65 | 567.35 | 100 |
| 1302 | இயந்திரம், உபகரணம் | 550,000.00 | 549,248.60 | 751.40 | 100 |
| 1303 | கட்டிடம், கட்டமைப்பு | 300,000.00 | 299,971.30 | 28.70 | 100 |
| | சேவைகள் | **40,531,810.00** | **40,424,672.18** | **107,137.82** | **100** |
| 1401 | போக்குவரத்து | 1,000,000.00 | 896,922.00 | 103,078.00 | 90 |
| 1402 | தபால், தொலைத்தொடர்பு | 2,354,750.00 | 2,353,821.32 | 928.68 | 100 |
| 1403 | மின்சாரம், நீர் | 6,159,830.00 | 6,159,828.60 | 1.40 | 100 |
| 1404 | வரி, வாடகை, உள்ளூராட்சி வரி | 150,000.00 | 148,584.00 | 1,416.00 | 99 |
| 1405 | வேறு | 30,867,230.00 | 30,865,516.26 | 1,713.74 | 100 |
| | மாற்றல்கள் | **1,452,569.00** | 1,431,869.49 | **20,699.51** | **99** |
| 1506 | ஆதனக் கடன் வாட்டி | 1,452,569.00 | 1,431,869.49 | 20,699.51 | 99 |
| **மொத்தம்** | | **349,515,909.00** | **348,744,032.69** | **771,876.31** | **100** |

## 4.3. மூலதனச் செலவுகள்

| உபசெயற்திட்டம் | விடயக் குறியீடு | விடய விபரம் | 2016 க்கான ஒதுக்கீடு (ரூ.) | 2016 க்கான நிகர செலவு (மேலதிக தொகையைக் கழித்த பின்னர்) (ரூ.) | மீதமுள்ள ஒதுக்கீடு (ரூ.) | மொத்தச் செலவு ஒதுக்கீட்டின் % மாக |
|---|---|---|---|---|---|---|
| | | **மூலதனச் சொத்துக்களைப் புனரமைத்தல் மற்றும் அபிவிருத்தி செய்தல்** | **4,100,000.00** | **4,087,224.08** | **12,775.92** | **100** |
| 0 | 2001 | கட்டிடம், கட்டமைப்பு | 3,000,000.00 | 2,997,976.71 | 2,023.29 | 100 |
| 0 | 2002 | இயந்திரம், உபகரணம் | 600,000.00 | 591,313.37 | 8,686.63 | 99 |
| 0 | 20 | வாகனம் | 500,000.00 | 497,934.00 | 2,066.00 | 100 |
| | | **மூலதனச் சொத்துக்களைப் பெற்றுக்கொள்ளல்** | **3,500,000.00** | **3,484,924.44** | **15,075.56** | **100** |

| உபசெயற்திட்டம் | விடயக் குறியீடு | விடய விபரம் | 2016 க்கான ஒதுக்கீடு (ரூ.) | 2016 க்கான நிகர செலவு (மேலதிக தொகையைக் கழித்த பின்னர்) (ரூ.) | மீதமுள்ள ஒதுக்கீடு (ரூ.) | மொத்தச் செலவு ஒதுக்கீட்டின் % மாக |
|---|---|---|---|---|---|---|
| 0 | 2102 | தளபாடம், அலுவலக உபகரணம் | 500,000.00 | 498,555.00 | 1,445.00 | 100 |
| 0 | 2103 | இயந்திரம், உபகரணம் | 500,000.00 | 487,291.24 | 12,708.76 | 97 |
| 0 | 2104 | கட்டிடம், கட்டமைப்பு | 2,500,000.00 | 2,499,078.20 | 921.80 | 100 |
| 0 | 2201 | மூலதன மாற்றுகை அரச நிறுவனங்கள் (நம்பிக்கை நிதியம்) [1] | 140,000,000.00 | 139,952,313.95 | 47,686.05 | 100 |
| 0 | 2401 | இயலுமை விருத்தி, பணியாளர் பயிற்சி | 200,000.00 | 191,185.00 | 8,815.00 | 96 |
| | | **விசேட செயற்திட்டங்கள்** | | | | |
| | | கம்பஹா தாவரவியல் பூங்கா & கனேவத்த மூலிகைப் பூங்கா அபிவிருத்தித் திட்டம் | **26,500,000.00** | **24,917,994.91** | **1,582,005.09** | **94** |
| 1 | 2102 | தளபாடம், அலுவலக உபகரணம் | 500,000.00 | 495,330.00 | 4,670.00 | 99 |
| 1 | 2103 | இயந்திரம், உபகரணம் | 2,000,000.00 | 1,980,939.51 | 19,060.49 | 99 |
| 1 | 2104 | கட்டிடம், கட்டமைப்பு | 12,900,000.00 | 11,345,633.65 | 1,554,366.35 | 88 |
| 1 | 2105 | காணி, காணி அபிவிருத்தி | 11,100,000.00 | 11,096,091.75 | 3,908.25 | 100 |
| | | **உலர் வலய தா. பூங்கா, அம்பாந்தோட்டை** | **98,500,000.00** | **98,365,401.78** | **134,598.22** | **100** |
| 3 | 2102 | தளபாடம், அலுவலக உபகரணம் | 1,000,000.00 | 966,423.75 | 33,576.25 | 97 |
| 3 | 2103 | இயந்திரம், உபகரணம் | 19,000,000.00 | 18,966,612.61 | 33,387.39 | 100 |

[1] 2016ம் ஆண்டுக்கு தாவரவியல் பூங்காக்கள் நம்பிக்கை நிதியத்துக்கு திறைசேரியால் ஒதுக்கப்பட்ட தொகை 125 மில்லியன் ரூபாய்களாகும். அது பூங்காக்களின் அபிவிருத்திக்குப் போதாமையால் அதற்கு மேலதிகமாக 15 மில்லியன் ரூபாய்களை நம்பிக்கை நிதியத்தால் செலவிட (சேமிப்புக் கணக்கிலிருந்து) 2016.05.11ம் திகதிய 2016ம் ஆண்டுக்கான நம்பிக்கை நிதியத்தின் இரண்டாவது கூட்டத்தில் அனுமதி வழங்கப்பட்டது. அதன் படி 2016ம் ஆண்டுக்கான நம்பிக்கை நிதியத்தின் மொத்த ஒதுக்கீடு 140 மில்லியன் ரூபாய்களாகும்.

| உபசெயற்திட்டம் | விடயக் குறியீடு | விடய விபரம் | 2016 க்கான ஒதுக்கீடு (ரூ.) | 2016 க்கான நிகர செலவு (மேலதிக தொகையைக் கழித்த பின்னர்) (ரூ.) | மீதமுள்ள ஒதுக்கீடு (ரூ.) | மொத்தச் செலவு ஒதுக்கீட்டின் % மாக |
|---|---|---|---|---|---|---|
| 3 | 2104 | கட்டிடம், கட்டமைப்பு | 44,000,000.00 | 43,945,509.26 | 54,490.74 | 100 |
| 3 | 2105 | காணி, காணி அபிவிருத்தி | 34,500,000.00 | 34,486,856.16 | 13,143.84 | 100 |
| | | **ஈர வலய தா. பூங்கா, அவிசாவலை** | **25,000,000.00** | **24,881,144.52** | **118,855.48** | **100** |
| 4 | 2102 | தளபாடம், அலுவலக உபகரணம் | 300,000.00 | 299,970.00 | 30.00 | 100 |
| 4 | 2103 | இயந்திரம், உபகரணம் | 1,000,000.00 | 997,319.35 | 2,680.65 | 100 |
| 4 | 2104 | கட்டிடம், கட்டமைப்பு | 8,550,000.00 | 8,434,452.66 | 115,547.34 | 99 |
| 4 | 2105 | காணி, காணி அபிவிருத்தி | 15,150,000.00 | 15,149,402.51 | 597.49 | 100 |
| 7 | 2105 | பசுமை இல்லப் பயிற்சி நிலையம், மீகல்லாவ | **5,000,000.00** | **4,996,364.70** | **3,635.30** | **99** |
| **மொத்தம்** | | | **302,800,000.00** | **300,876,553.38** | **1,923,446.62** | **99** |

## 4.4. திணைக்களத்தின் 2016ம் ஆண்டின் ஒதுக்கீடு மற்றும் செலவு (அலகு / பூங்கா அடிப்படையில்)

| நிகழ்ச்சித் திட்டம் | 2016ம் ஆண்டுக்கான அரசின் மொத்த ஒதுக்கீடு (ரூ.மில்) | 2016 ம் ஆண்டுக் கான செலவு (ரூ.மில்) | 2016 ம் ஆண்டு தாவாரவியல் பூங்காக்கள் நம்பிக்கை நிதியத்தின் ஒதுக்கீடு (ரூ.மில்) | 2016 ம் ஆண்டு தாவாரவியல் பூங்காக்கள் நம்பிக்கை நிதிய ஒதுக்கீட்டிலிருந்து செய்யப்பட்ட செலவு (ரூ.மில்) | மொத்தச் செலவு (ரூ.மில்) |
|---|---|---|---|---|---|
| பேராதனை, அரச தாவரவியல் பூங்கா அபிவிருத்தி | 7.175 | 7.141 | 46 | 45.875 | 53.016 |
| தாவரவியல் பூங்கா அபிவிருத்தி, கம்பஹா | 15.550 | 14.170 | 3 | 3.161 | 17.331 |
| தாவரவியல் பூங்கா அபிவிருத்தி, ஹக்கல | 0.425 | 0.426 | 32 | 32.348 | 32.774 |

| நிகழ்ச்சித் திட்டம் | 2016ம் ஆண்டுக்கான அரசின் மொத்த ஒதுக்கீடு (ரூ.மில்) | 2016 ம் ஆண்டுக் கான செலவு (ரூ.மில்) | 2016 ம் ஆண்டு தாவாரவிய ல் பூங்காக்கள் நம்பிக்கை நிதியத்தின் ஒதுக்கீடு (ரூ.மில்) | 2016 ம் ஆண்டு தாவாரவியல் பூங்காக்கள் நம்பிக்கை நிதிய ஒதுக்கீட்டி லிருந்து செய்யப்பட்ட செலவு (ரூ.மில்) | மொத்தச் செலவு (ரூ.மில்) |
|---|---|---|---|---|---|
| மூலிகைப் பூங்கா அபிவிருத்தி, கனேவத்த | 10.950 | 10.748 | 3 | 3.011 | 13.759 |
| மீகல்லாவ பசுமை இல்ல பயிற்சி நிலைய அபிவிருத்தி | 5.0 | 4.996 | 0.0 | 0.0 | 4.996 |
| கல்வி மற்றும் பயிற்சி | 0.2 | 0.191 | 1.0 | 0.914 | 1.105 |
| தாவரக்கயம் மற்றும் தாவர வகைப்படுத்தல் ஆய்வு | 0.0 | 0.0 | 5 | 4.714 | 4.714 |
| தேசிய பூச்செடியியல் அபிவிருத்தி | 0.0 | 0.0 | 23 | 23.336 | 23.336 |
| ஈர வலய தாவரவியல் பூங்கா, அவிசாவலை | 25.0 | 24.881 | 5 | 4.799 | 29.680 |
| உலர் வலய தாவரவியல் பூங்கா, அம்பாந்தோட்டை | 98.50 | 98.365 | 2 | 1.892 | 100.257 |
| பிரதான பணிமனை அபிவிருத்தி நடவடிக்கைகள் | 0.0 | 0.0 | 20 | 19.904 | 19.904 |
| **மொத்தம்** | **162.8** | **160.918** | **140** | **139.954** | **300.872** |

## 5. 2016ம் ஆண்டில் தாவரவியல் பூங்காக்களில் மேற்கொள்ளப்பட்ட அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களின் முன்னேற்றம்

அனைத்துப் பூங்காக்களிலும் நில அலங்காரப் பணிகள் உரிய முறையில் மேற்கொள்ளப்பட்டதோடு, புதிய பகுதிகள் அபிவிருத்தி செய்யப்பட்டு, அடிப்பாதைகள், வீதிகள் ஆகியன செயற்றிறன் மிக்க வகையில் பேணப்பட்டு அனைத்துப் பூங்காக்களும் உயர் தரத்தில் முகாமை செய்யப்பட்டன.

### 5.1 அரச தாவரவியல் பூங்கா, பேராதனை

❖ **நிதி முன்னேற்றம்**

அனுமதிக்கப்பட்ட ஒதுக்கு : மூலதனக் கொடுப்பனவுகளிலிருந்து ரூ.மில். **7.175**, தா. பூ. நம்பிக்கை நிதியத்திலிருந்து ரூ.மில். **46**
செலவு : ரூ.மில். **53.016**

❖ **பௌதீக முன்னேற்றம்**

- தாவரப் பேணுகை நோக்கில், நிழலை விரும்பும் தாவரங்களையும் அரிய வகைத் தாவரங்களையும்



**நிர்மாணிக்கப்பட்டுள்ள தாவரப் பேணகம்**

காட்சிப்படுத்தவென, பொது மக்கள் பார்வையிடும் வசதியுடனான தாவரப் பேணகம் ஒன்று நிர்மாணிக்கப்பட்டுள்ளது. அதில் தாவரங்களை நடும் பணிகளும் மற்றும் உள்ளக வடிவமைப்புப் பணிகளும் இடம்பெற்று வருகின்றன. 2017 ல் இதனை பொதுமக்களுக்காகத் திறந்து வைக்க எதிர்பார்க்கப்படுகிறது.



**கண்ணோருவ பகுதியில் அமைந்துள்ள நுழைவுச் சீட்டுக் கருமபீடம்**

- பூங்காவின் உள்ளக வீதிகள்,

  வடிகான்கள் மற்றும் நீர்ப்பாசனத் தொகுதிகள் மேம்படுத்தப்பட்டதோடு கட்டிடங்களும் திருத்தப்பட்டு பூங்காவுக்குப் புதுப் பொலிவு வழங்கப்பட்டது. பூங்கா அலுவலர்களது வாசஸ்தலங்களும் திருத்தி அமைக்கப்பட்டன.



**நிர்மாணிக்கப்பட்ட வசந்த இல்லமொன்று**

- பூங்காவின் பிரதான பாதைகள் காபட் இடப்பட்டு மேம்படுத்தப்பட்டன.
- பூங்காவின் சுற்றுலா விடுதி திருத்தியமைக்கப்பட்டு, நவீன உபகரணங்கள் பொருத்தப்பட்டு மேம்படுத்தப்பட்டன.
- பூங்காவின் சுற்றுலாப் பயணிகளுக்கான உணவகத்தின் கூரை திருத்தியமைக்கப்பட்டு மேம்படுத்தபப்ட்டது.
- பிரதான நுழைவாயில் ஊடாக பூங்காவுக்குள் பார்வையாளர்கள் உள் நுழையும் போது ஏற்படும் நெரிசலைக் குறைத்துக்கொள்ளும் நோக்கில் கண்ணோருவ பகுதியில் அமைந்துள்ள நுழைவுச் சீட்டுக் கருமபீடம் திறந்து வைக்கப்பட்டது.
- பூங்காவில் புதிதாக 03 வசந்த இல்லங்கள் நிர்மாணிக்கப்பட்டன.



**புதிதாக நிர்மாணிக்கப்பட்ட வாசஸ்தலம்**

- புதிதாக உத்தியோகபூர்வ வாசஸ்தலமொன்று நிர்மாணிக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டதோடு, அதன் முதலாம் கட்ட நிர்மாணப் பணிகள் நிறைவு பெற்றுள்ளன. இரண்டாம் கட்ட நிர்மாணப் பணிகள் 2017 ல் நிறைவு செய்யப்படவுள்ளன.

- பூங்காவின் உயிர்த் தாவரச் சேகரிப்புக்கு புதிய தாவர வகைகள் சேர்க்கப்பட்டு தாவரச் சேகரிப்பு பலப்படுத்தப்பட்டது, தாவரப் பேணுகை நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன. மேலும் இப்பூங்காவில் 125,803 தாவரக் கன்றுகள் உற்பத்தி செய்யப்பட்டன.



**பாதைகள் காபட் இடப்பட்டு மேம்படுத்தப்பட்டன.**

- பூங்காவின் தாவரச் சேகரிப்புக்கு பெயர்ப் பலகைகள் பொருத்தப்பட்டதோடு விஷேட தாவரங்கள் குறித்த விபரமான பெயர்ப் பலகைகள் 100 பொருத்தப்பட்டன. பூங்காவினுள் வீதி சமிக்ஞை பெயர்ப் பலகைகளும் பொருத்தப்பட்டன. மேலும் பூங்காவினுள் காணப்படும் பறவைகள் உள்ளிட்ட ஏனைய விலங்குகள் பற்றிய 03 விளக்கப் பலகைகள் பொருத்தப்பட்டன.

- பூங்காவின் இரு அலகுகளது தாவரங்கள் முழுமையாக மீள் வகைப்படுத்தப்பட்டன. பறவைகளையும் வண்ணத்துப் பூச்சிகளையும் கவரும் தாவரச் சேகரிப்புக்களை பூங்காவில் அமைப்பதற்கு திட்டமிடப்பட்டு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன.



**புதிதாக பொருத்தப்பட்ட பறவைகள் பற்றிய விபரப் பலகை**

- பார்வையாளர்களுக்குத் தேவையான தகவல்களைப் பெற்றுக்கொள்வதற்கான தகவல் நிலையமொன்றை ஸ்தாபிப்பதற்குத் தேவையான தகவல்களை உள்ளடக்கிய பிரசுரங்கள், விபரப் பலகைகள் ஆகியன தயாரிக்கப்பட்டன. வருகை தரும் பார்வையாளர்களுக்கு பூங்கா பற்றிய தகவல்களை வழங்கவென பூங்காவை சுற்றிப் பார்ப்பதற்கான வழிகாட்டும் நிகழ்ச்சித் திட்டமொன்று நடைமுறைப்படுத்தப்பட்டதோடு, இத்தகைய நிகழ்ச்சிகள் 79 நடாத்தப்பட்டு 2,940 பேருக்கு சேவை வழங்கப்பட்டது.
- பூங்காவின் தாவரங்களது பாதுகாப்பு மற்றும் பரிபாலன நடவடிக்கைகளை செயற்றிறன் மிக்க வகையில் மேற்கொள்ளவென CCTV கமெரா தொகுதியொன்று பூங்காவினுள் ஸ்தாபிக்கப்பட்டது.



தாஜிகிஸ்தான் ஜனாதிபதி இமோமாலி ரஹ்மான் பூங்காவைப் பார்வையிட வருகை தந்த போது.

- இவ்வருடம் பூங்காவைப் பார்வையிட வெளிநாட்டு அரச பிரமுகர்கள் 24 பேர் வருகை தந்தனர். அவர்களுள் பாகிஸ்தான் பிரதமர் திரு முஹம்மத் நவாஸ் ஷெரீப், நிவ்சிலாந்தின் பிரதமர் திரு ஜோன் கீ தாஜிகிஸ்தான் ஜனாதிபதி திரு இமோமாலி ரஹ்மான் ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்களாவர்.

## 5.2 தாவரவியல் பூங்கா, ஹெனரத்கொட, கம்பஹா

❖ **நிதி முன்னேற்றம்**

அனுமதிக்கப்பட்ட ஒதுக்கு :
மூலதனக் கொடுப்பனவுகளிலிருந்து ரூ.மில். 15.55
தா. பூ. நம்பிக்கை நிதியத்திலிருந்து ரூ.மில். 03
செலவு : ரூ.மில். 17.331



**புதிதாக நிர்மாணிக்கப்பட்ட வாசஸ்தலம்**

❖ **பௌதீக முன்னேற்றம்**

- பூங்காவின் அழகை மேம்படுத்தும் நோக்கில் அதன் கட்டிடங்கள், வாசஸ்தலங்கள், தாவர இல்லம், சுற்று மதில், வசந்த இல்லங்கள், நிழல் இல்லங்கள், தோணித் துறை ஆகியன திருத்தியமைக்கப்பட்டதோடு, பூங்காவை உயர் மட்டத்தில் பேணும் பொருட்டு நில அலங்கரப் பணிகளும் ஏனைய பேணுகை நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டன.
- பூங்காவின் குளத்தில் சவாரிக்கென 03 படகுகள் அமர்த்தப்பட்டன.
- வாகனம் நிறுத்துமிடத்தை அண்மிய பகுதி இன்டர்லொக் பொருத்தப்பட்டு மீளமைக்கப்பட்டது.
- பூங்காவுக்கு புதுப் பொலிவை வழங்கும் பொருட்டு நுழைவுச்சீட்டுக் கருமபீடமும் அதற்கு அண்மையில் அமைந்துள்ள காவலரணும் திருத்தியமைக்கப்பட்டன.
- பார்வையாளர்களின் பாவனைக்காக புதிய கழிவறைத் தொகுதியொன்றும் நிர்மாணிக்கப்பட்டது.
- தற்போதுள்ள உத்தியோகத்தர் வாசஸ்தலங்களுக்கு மேலதிகமாக புதிய வாசஸ்தலம் ஒன்றும் நிர்மாணிக்கப்பட்டது.

- பூங்காவின் உயிர்த் தாவரச் சேகரிப்புக்கு புதிய தாவர வகைகள் சேர்க்கப்பட்டு தாவரச் சேகரிப்பு பலப்படுத்தப்பட்டு, தாவரப் பேணுகை நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன. மேலும் இப்பூங்காவில் 55,663 தாவரக் கன்றுகள் உற்பத்தி செய்யப்பட்டன. பூங்காவின் தாவரச் சேகரிப்புக்கு பெயர்ப் பலகைகள் பொருத்தப்பட்டன.

- பார்வையாளர்களுக்குத் தேவையான தகவல்களை வழங்குவதற்கான தகவல் நிலையமொன்றை ஸ்தாபிப்பதற்குத் தேவையான தகவல்களை உள்ளடக்கிய பிரசுரங்கள், விபரப் பலகைகள் ஆகியன தயாரிக்கப்பட்டன.
- பார்வையாளர்களுக்கான வசதிகளை மேம்படுத்தும் பொருட்டு 25 ஆசனங்கள் அமைக்கப்பட்டன.

- பூங்காவுக்கான பார்வையாளர் வருகையை அதிகரித்துக்கொள்ளும் நோக்கில் மக்கள் பார்வைக்காக ஒக்கிட் தாவர இல்லமொன்றினை நிர்மாணிக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டு அதன் 20% வேலைகள் தற்போது நிறைவடைந்துள்ளன. இது தொடர்பான ஆலோசனை சேவைகளும் நிர்மாணப் பணிகளும் அரச பொறியியல் கூட்டுத்தாபனத்தால் முன்னெடுக்கப்படுகின்றன.

- இதற்கு மேலதிகமாக பொன்சாய்த் தாவரச் சேகரிப்பொன்றை அமைத்து மக்களின் பார்வைக்காக திறந்து வைப்பதற்கான நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்படுகின்றன.



**நிர்மாணிக்கப்பட்டுவரும் ஒக்கிட் இல்லம்**



**புதிதாக நிர்மாணிக்கப்பட்ட கழிவறைத் தொகுதி**



**மக்களின் பார்வைக்காக திறந்து வைக்கப்பட அமைக்கப்படும் பொன்சாய் இல்லம்**

## 5.3 ஹக்கல தாவரவியல் பூங்கா

❖ **நிதி முன்னேற்றம்**

அனுமதிக்கப்பட்ட ஒதுக்கு :
மூலதனக் கொடுப்பனவுகளிலிருந்து ரூ.மில். 0.425
தா. பூ. நம்பிக்கை நிதியத்திலிருந்து ரூ.மில். 32
செலவு : ரூ.மில். 32.774

❖ **பௌதீக முன்னேற்றம்**

- பூங்காவின் வெளித் தோற்றத்தை அபிவிருத்தி செய்யும் நோக்கில் அதன் கட்டிடங்கள், வாசஸ்தலங்கள், தாவர இல்லங்கள், வசந்த இல்லங்கள், சுற்றுலா விடுதி ஆகியன பழுதுபார்க்கப்பட்டு நிறம் பூசப்பட்டன.
- தற்போதுள்ள அலுவலகக் கட்டிடத்தில் ஊழியர்களுக்குப் போதிய இட வசதியின்மையால் அதனை விஸ்தரிக்கும் பணிகள் பூர்த்தி செய்யப்பட்டன.
- தற்போதுள்ள நுழைவுச்சீட்டுக் கருமபீடம் மிகப் பழையதும் போதிய இடவசதி அற்றதுமாகும். ஆதலால் புதிய நுழைவாயில் கட்டிடத் தொகுதியொன்று நிர்மாணிக்கப்பட்டது. 2017 ம் ஆண்டில் அது திறந்து வைக்கப்படவுள்ளது.
- தற்போதுள்ள உத்தியோகத்தர் வாசஸ்தலங்களுக்கு மேலதிகமாக புதிதாக வாசஸ்தலம் ஒன்று நிர்மாணிக்கப்பட்டது.
- புதிய கழிவறைத் தொகுதியொன்றை நிர்மாணிக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்ட போதும் ஒப்பந்தக்காரரின் தாமதம் காரணமாக அதன் வேலைகள் இடைநிறுத்தப்பட்டது. 2016 ம் ஆண்டில் அதன் 25% வீதமான வேலைகள் மட்டுமே நிறைவு பெற்றன. 2017ம் ஆண்டில் புதிதாக விலை மனு கோரப்பட்டு மீதி வேலைகள் நிறைவேற்றப்படவுள்ளன.
- பார்வையாளர்களின் பாவனைக்காகப் புதிய உணவகமொன்று நிர்மாணிக்கப்பட்டது.



**அலுவலகப் பகுதி விஸ்தரிப்புப் பணிகள்**



**புதிய நுழைவாயில் கட்டிடத்தொகுதி**



**நிர்மாணிக்கப்படும் புதிய உணவகம்**

- பூங்காவின் உயிர்த் தாவரச் சேகரிப்புக்கு புதிய தாவர வகைகள் சேர்க்கப்பட்டு தாவரச் சேகரிப்பு பலப்படுத்தப்பட்டு, தாவரப் பேணுகை நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன. மேலும் இப்பூங்காவில் 139,600 தாவரக் கன்றுகள் உற்பத்தி செய்யப்பட்டன.
- பார்வையாளர்களுக்குத் தேவையான தகவல்களை வழங்குவதற்கான தகவல் நிலையமொன்றை ஸ்தாபிப்பதற்குத் தேவையான தகவல்களை உள்ளடக்கிய பிரசுரங்கள், விபரப் பலகைகள் ஆகியன தயாரிக்கப்பட்டன.



புதிதாக நிர்மாணிக்கப்படும் வாசஸ்தலம்

- பூங்காவின் தரத்தை மேம்படுத்தும் பொருட்டு நில அபிவிருத்திப் பணிகளும் ஏனைய பேணுகை நடவடிக்கைகளும் மேற்கொள்ளபப்ட்டன.
- பூங்காவின் மேல் பகுதிப்பாதைகள் கற்கள் இடப்பட்டு அபிவிருத்தி செய்யப்பட்டன.

## 5.4. கனேவத்த மூலிகைப் பூங்கா

❖ **நிதி முன்னேற்றம்**

அனுமதிக்கப்பட்ட ஒதுக்கு :
மூலதனக் கொடுப்பனவுகளிலிருந்து ரூ .மில்.10.95
தா. பூ. நம்பிக்கை நிதியத்திலிருந்து ரூ .மில். 3
செலவு : ரூ.மில்.13.759

❖ **பௌதீக முன்னேற்றம்**

பூங்காவின் புற அழகை மேம்படுத்தி அதன் கட்டிடங்கள் மற்றும் ஏனைய கட்டமைப்புக்கள் சிறந்த முறையில் பேணப்பட்டு பூங்கா உயர் மட்டத்தில் பேணும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.



பூங்காவில் புதிதாக அமைக்கப்பட்ட வசந்த இல்லம்

- பிரதேசத்தில் பூச்செடிச் செய்கையை பிரபலப்படுத்தும் நோக்கில் அந்தூரியம் மற்றும் ஒக்கிட் அலகுகளை அமைக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டன.
- தாவர வளர்ப்புச் செயற்திட்டம் முன்னெடுக்கப்பட்டு 48,000 க்கும் மேற்பட்ட கன்றுகள் உற்பத்தி செய்யப்பட்டன. தாவரச் சேகரிப்பை அபிவிருத்தி செய்யவென இரிவேரிய, தெத்த ஆகிய தாவரங்களை உள்ளடக்கிய தாவர அலகுகள் ஏற்படுத்தப்பட்டன. அத்தோடு, மேலதிகமாக ஒரு தாய்த்தாவரச் சேகரிப்பொன்றை



பிரதேசத்தில் பூச்செடிச் செய்கையை பிரபலப்படுத்தும் நோக்கில் அமைக்கப்பட்ட அந்தூரியம் மற்றும் ஒக்கிட் அலகுகள்

ஸ்தாபிக்கவும் நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது.

- பார்வையாளர்களுக்குத் தேவையான தகவல்களை வழங்குவதற்கான தகவல் நிலையமொன்றை ஸ்தாபிப்பதற்குத் தேவையான தகவல்களை உள்ளடக்கிய பிரசுரங்கள், விபரப் பலகைகள் ஆகியன தயாரிக்கப்பட்டன.
- பூங்காவில் புதிதாக வசந்த இல்லமொன்று அமைக்கப்பட்டது.
- பூங்காவின் வாகனம் நிறுத்தும் இடம் திருத்தப்பட்டு தாவரக்கயப் பகுதி நவீனமயப்படுத்தப்பட்டது.
- சுதேச மருத்துவப் பெறுமதி வாய்ந்த உணவு, பானங்களின் விற்பனைக்கென உணவகமொன்று நிர்மாணிக்கப்பட்டது. அதற்கு அண்மையில் புதிய கழிவறைகள் 02 நிர்மாணிக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது.
- பூங்காவினுள் குடி நீர் தொகுதியொன்றை ஸ்தாபிக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டு அதற்காக கிணறொன்று தோண்டப்பட்டது.
- மூலிகைகள் பற்றி அறிவூட்டும் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ், 2,273 பேருக்கு மூலிகைப் பாவனை, அவற்றின் பெறுமதி மற்றும் பேணுகை பற்றி விரிவுரைகள் நடாத்தப்பட்டன.



**தாவரச் சேகரிப்பு அபிவிருத்தி நடவடிக்கைகள்**



**சுதேச மருத்துவப் பெறுமதி வாய்ந்த உணவு, பானங்களின் விற்பனைக்கென புதிதாக நிர்மாணிக்கப்பட்ட உணவகம்**

## 5.5 தாவரக்கயம் தாவர வகைப்படுத்தல் மற்றும் தாவர அடையாளம் காணல் ஆய்வுகள்

❖ **நிதி முன்னேற்றம்**

| |
|---|
| அனுமதிக்கப்பட்ட ஒதுக்கு : |
| தா. பூ. நம்பிக்கை நிதியத்திலிருந்து ரூ .மில். 5 |
| செலவு : ரூ.மில். 4.714 |



**தாவரக்கய தொழில்நுட்ப முறைகள் மற்றும் முகாமை பற்றிய செயலமர்வொன்று**

❖ **பௌதீக முன்னேற்றம்**

- உயிரினப் பல்வகைமை பேணல் மற்றும் தாவரக்கய தொழில்நுட்ப முறைகள் மற்றும் முகாமை பற்றிய 34 செயலமர்வுகள் 316

பாடசாலை மாணவர்களுக்கும், 589 பல்கலைக்கழக மாணவர்களுக்கும், அரச மற்றும் தனியார் துறை அதிகாரிகள் 199 பேருக்கும் நடாத்தப்பட்டன. இப்பயிற்சிகளில் தாவரக்கய தொழில்நுட்ப முறைகள் மற்றும் முகாமை, தாவர வகைப்படுத்தல் மற்றும் தாவர அடையாளம் காணல், உயிரினப் பல்வகைமை, உயிரினப் பல்வகைமையைப் பேணல் ஆகியவற்றின் முக்கியத்துவம், தேசிய சிவப்புத் தரவுப் பட்டியலைத் தயாரிப்பதில் தேசிய தாவரக்கயத்தின் பங்களிப்பு ஆகியன குறித்து விளக்கமளிக்கப்பட்டன

- கண்டி, கேகாலை மற்றும் மாத்தளை மாவட்டங்களைச் சேர்ந்த 291 உயர் தர மாணவர்களுக்கு உயிரினப் பல்வகைமை, உயிரினப் பல்வகைமையைப் பேணல் என்பன பற்றி பிரயோக ரீதியான நிகழ்ச்சிகள் உள்ளடங்கலாக செயலமர்வுகள் 06 நடாத்தப்பட்டன.




**உயிரினப் பல்வகைமை தொடர்பில் பிரசுரிக்கப்பட்ட சுவரொட்டியொன்று**

- இக் கண்டாய்தல் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் பிரதானமாக உலர் மற்றும் ஈர வலய, அழிவுறும் ஆபத்துக்கு உட்பட்டுள்ள தாவரங்களை இலக்காகக்கொண்டு இவ்வருட தாவரக் கண்டாய்தல் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டன. அதற்கு மேலதிகமாக உயர் மலைநாட்டுப் பிரதேசத்தின் தாவரக் கண்டாய்தல் ஆய்வுகள் புனித பாத மலைத்தொடரை அண்டி மேற்கொள்ளப்பட்டன.
- தாவரவியல் விஞ்ஞான ரீதியான தாவரக் கண்டாய்தல் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் 21 கள ஆய்வுகள் நடாத்தப்பட்டு பூக்கும் தாவர மாதிரிகள் 810ம் பன்னத்தாவர மாதிரிகள் 54ம் பாசித்தாவர மாதிரிகள் 195ம் சேகரிக்கப்பட்டன.
- இம்மாதிரிகளுள் அழிவுறும் ஆபத்துக்கு உட்பட்டுள்ள தாவரங்களை அடையாளம் காணும் பணி முன்னெடுக்கப்பட்டதோடு, அழிவுற்ற தாவர வகையைச் சார்ந்த ஒரு தாவர இனமும், 06 அழிவுறும் ஆபத்துக்கு அதிகம் உட்பட்டுள்ள தாவரங்களும், 53 அழிவுறும் ஆபத்துக்கு உட்பட்டுள்ள தாவரங்களும், 78 எதிர்காலத்தில் அழிவுறும் ஆபத்துக்கு உட்பட முடியுமான தாவரங்களும், 53 அழிவுறும் ஆபத்துக்கு உட்படும் நிலையை அண்மித்துள்ள தாவரங்களும், 208 அழிவுறும் ஆபத்து இல்லாத தாவரங்களும், போதியளவு தகவல்கள் அறிக்கைப்படுத்தப்படாத இனங்களைச் சார்ந்த தாவரங்கள் 02ம் அடையாளம் காணப்பட்டன.



128 வருடங்களிற்குப் பிறகு, மீமுரே பிரதேசத்தில் கண்டுபிடிக்கப்பட்ட, 2012ம் ஆண்டின் சிவப்புத் தரவுப் பட்டியலில், அழிந்துவிட்ட தாவரம் எனக் குறிப்பிடப்பட்ட *Rinorea decora* தாவரம்

- தாவர வெளிவாரிப் பேணுகை முறைமைகளைப் பயன்படுத்தி தேவையான தாவரப் பேணுகை நடவடிக்கைகள்

மேற்கொள்ளப்பட்டதோடு, சேகரிக்கப்பட்ட மாதிரிகளில் 1188 பூக்கும் தாவர மாதிரிகளும் 212 பன்னத்தாவர மாதிரிகளும் 175 பாசித்தாவர மாதிரிகளும் தேசிய தாவரக்கயத்தில் எதிர்கால ஆய்வுகளுக்காக சேமித்து வைக்கப்பட்டன.

- தாவரவியல் விஞ்ஞான ரீதியான கண்டாய்தல் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் கள ஆய்வுகள் மேற்கொண்டபோது 128 வருடங்களிற்குப் பிறகு, மீமுரே பிரதேசத்தில் கண்டுபிடிக்கப்பட்ட, 2012ம் ஆண்டின் சிவப்புத் தரவுப் பட்டியலில், அழிந்து விட்ட தாவரம் எனக் குறிப்பிடப்பட்ட *Rinorea decora* தாவரம் கண்டுபிடிக்கப்பட்டதோடு வெளிவாரிப் பேணுகைக்காக அதன் பகுதிகள் பேராதனை தாவரவியல் பூங்காவுக்குக் கொண்டுவரப்பட்டன.
- பல்கலைக்கழக ஆய்வுகள், ஆயுர்வேத ஆய்வுகள், வாணிபக் கைத்தொழில், ஏனைய அரச மற்றும் தனியார் துறை நிறுவனங்களுக்காகவும் தாவரக்கயத்தில் சேமிப்பதற்காகவும் 1812 பூக்கும் தாவர மாதிரிகளும் 218 பன்னத்தாவர மாதிரிகளும் 130 பாசித்தாவர மாதிரிகளும் அடையாளம் காணப்பட்டன.
- மாஜிஸ்திரேட் நீதிமன்றங்கள், பொலிஸ் மற்றும் சுங்கத் திணைக்களத்தால் முன்வைக்கப்பட்ட, 33 வழக்குகள் தொடர்பான 249 மாதிரிகள் சட்ட நடவடிக்கைகளுக்காக அடையாளம் காணப்பட்டன.
- மத்திய மலை நாட்டில் சேகரிக்கப்பட்ட சுமார் 15 தாள வகைத் தாவரங்கள் அரச தாவரவியல் பூங்காவில் வளர்க்கப்பட்டு வெளிவாரிப் பேணுகை மேற்கொள்ளப்பட்டதோடு, இரசாயனகூடத்தினுள் உரிய வளர் நிலைமைகள் வழங்கப்பட்டு துளிர்விடச்செய்து பேணப்படுகின்றன.
- "Wild Flowers of Sri Lanka" என்ற புத்தகம் பிரசுரிக்கப்பட்டது. அதில், 250 தாவர மாதிரிகளது புகைப்படங்களுடன் விஞ்ஞானத் தகவல்கள், பொதுப் பெயர், பாதுகாப்பு நிலை, வாசஸ்தலம் என்பன பற்றிய விபரங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன. அத்தோடு அது சிங்களம், தமிழ் ஆகிய மொழிகளை உள்ளடக்கி வெளியிடப்பட்டுள்ளது.




**"Wild Flowers of Sri Lanka" புத்தகம்**

- "Common Wayside Trees of Sri Lanka" என்ற புத்தகத்தை வெளியிடுவதற்கான பணிகள் முன்னெடுக்கப்படுகின்றன. அதில் 100 தாவர மாதிரிகளது புகைப்படங்களுடன் விஞ்ஞானத் தகவல்கள், பொதுப் பெயர், பாதுகாப்பு நிலை, வாசஸ்தலம் என்பன பற்றிய விபரங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன. அத்தோடு அது சிங்களம், தமிழ் ஆகிய மொழிகளை உள்ளடக்கி வெளியிடப்படவுள்ளது.
- இலங்கையின் அழிவுறும் ஆபத்துக்கு உட்பட்டுள்ள தாவரங்கள், ஆக்கிரமிப்புத் தாவரங்கள், உயிரினப் பல்வகைமை, இலங்கையின் காட்டுப் பூக்கள், இலங்கையின் அலங்கார ஓக்கிற்றுக்கள் ஆகியன பற்றிய பிரசுரங்களும் சுவரொட்டிகளும் பிரசுரிக்கப்பட்டு, வெளியிடப்பட்டன.
- தேசிய தாவரக்கயத்தில் சேமித்து வைக்கப்பட்டுள்ள வரைபடங்கள் மற்றும் மாதிரிகளது எண்ணிக்கையை நிர்ணயித்துக்கொள்ளும் பொருட்டும் ஆய்வுப் பணிகளை இலகு படுத்தும்

நோக்கிலும் அம்மாதிரிகளுக்கு நுழைவு எண்களை (Accession number) வழங்கி அவற்றை தரவு முறைமையொன்றிற்கு உட்புகுத்தும் பணிகள் மேற்கொள்ளப்பட்டன.

- தேசிய தாவரக்கயத்தினை நவீன மயப்படுத்தும் பணிகள் முன்னெடுக்கப்பட்டதோடு, பரிசோதனைக் கூடம், பழைய கட்டிடத்தின் கழிவு நீர்க் குழாய் ஆகியனவும் திருத்தியமைக்கப்பட்டன. புதிய தாவரக்கயத்தில் சேகரித்து வைக்கப்பட்டுள்ள மாதிரிகளை சிறந்த முறையில் பேண அப்பகுதிக்கு குளிரூட்டல் இயந்திரம் பொருத்தப்பட்டது.

## 5.6. தேசிய பூச்செடியியல் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம்

- **நிதி முன்னேற்றம்**

| |
|---|
| அனுமதிக்கப்பட்ட ஒதுக்கு : |
| தா. பூ. நம்பிக்கை நிதியத்திலிருந்து ரூ .மில். 23 |
| செலவு : ரூ.மில். 23.336 |

- **பௌதீக முன்னேற்றம்**

சிறு மற்றும் நடுத்தர பூ வளர்ப்போரை பலப்படுத்தி அவர்களது பொருளாதார நிலைமையை மேம்படுத்துவதற்காக இவ்வருடமும் பூச்செடியியல் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டது.



**பூ வளர்ப்போருக்கான செயலமர்வு**

- நாடாளாவிய ரீதியில் பூச்செடியியலை விஸ்தரிக்குமுகமாக பூ வளர்ப்போர் சங்கங்களின் எண்ணிக்கை 173 ஆக அதிகரிக்கப்பட்டு இவ்வருடம் புதிதாக 11 சங்கங்கள் உருவாக்கப்பட்டன. அந்தூரியம், ஓக்கிட், ரோசா, ஜெர்பரா, வெட்டு இலைகள் மற்றும் இழைய வளர்ப்பு உள்ளிட்ட ஏனைய பூவளர்ப்புத் துறைகள் பற்றி 24,972 பேருக்கு பயிற்சியளிக்கப்பட்டது. மேலும் 67 பாடசாலை மாணவர் செயற்திட்டங்களுக்கு உரிய வழிகாட்டல்கள் வழங்கப்பட்டன.
- பூ வளர்ப்போரது தொழில்நுட்ப மற்றும் ஏனைய திறமைகளை வளர்ப்பதற்காக 19 செயலமர்வுகள் நடாத்தப்பட்டு 966 பூ வளர்ப்போர் பயிற்றுவிக்கப்பட்டனர்.
- பூ வளர்ப்போரது உற்பத்திகளின் விற்பனையை அதிகரிக்கச் செய்யும் பொருட்டு சிற்றளவிலான கண்காட்சிகள் 387ம் மாவட்ட மட்டத்திலான பெரிய கண்காட்சிகள் 3ம் நடாத்தப்பட்டன. பூ வளர்ப்போரது 1471 நாற்று மேடைகள் சோதிக்கப்பட்டு பூ வளர்ப்போர் சங்கங்களது 538 கூட்டங்களுக்கு சென்று களப் பிரச்சினைகளுக்கு தீர்வு ஆலோசனைகள் வழங்கப்பட்டன.
- களத்திலும் இரசாயனகூட வசதிகளின் கீழும் ஓக்கிட் கலப்பினங்கள் மற்றும் அந்தூரியம் வகைகள் உருவாக்கப்பட்டன.
- அனைத்துப் பூங்காக்களதும் பூச்செடிச் செய்கை அலகுகளின் நாற்றுமேடைகள் உயர் தரத்தில் பேணப்பட்டதோடு, அவற்றின் அபிவிருத்திக்குத் தேவையான வளர்ப்பு ஊடகங்கள் கொள்வனவு செய்யப்பட்டன. பேராதனை பூங்காவின் தாவர இல்லம் பழுதுபார்க்கப்பட்டு மேம்படுத்தப்பட்டது.

- நாரஹேன்பிட உதவிப் பணிப்பாளர் அலுவலகத்தை பூச்செடியியல் மற்றும் தாவரங்கள் சம்பந்தமான தகவல்களை கொழும்புப் பிரதேச மக்களுக்கு வழங்கும் தகவல் நிலையமாக அபிவிருத்தி செய்யும் பணிகள் மேற்கொள்ளப்பட்டதோடு, ஒரு கேட்போர் கூடமும் அமைக்கப்பட்டது. அதில் பூச்செடியியல் மற்றும் தாவரங்கள் சம்பந்தமான ஆலோசனை வழங்கல், பயிற்சி வகுப்புகளை நடாத்துதல் முதலிய பணிகள் இடம்பெறும்.



**பூ வளர்ப்போரது உற்பத்திகளின் விற்பனையை அதிகரிக்கச் செய்தற்கான கண்காட்சியொன்று**

- நாட்டின் பூச்செடியியல் தொழிற்துறையை மேம்படுத்துவதற்கும் நிகழ்கால மற்றும் எதிர்கால களத் தேவைகளை ஈடு செய்யும் வகையிலான பல ஆய்வுகள் செய்யப்பட்டதோடு தற்போது பூ வளர்ப்போர் எதிர்நோக்கும் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கும் பல ஆய்வுகள் முன்னெடுக்கப்பட்டன.



**பூ வளர்ப்போரது நாற்று மேடைகளுக்குச் சென்று ஆலோசனை வழங்கல்**



**நாரஹேன்பிட உதவிப் பணிப்பாளர் அலுவலகத்தில் அமைக்கப்பட்ட கேட்போர் கூடம்**

### 5.6.1. 2016 ம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகள்

#### 5.6.1.1. Agronomy (வளர்ப்புத் தொழில்நுட்பம்) மற்றும் ஹோர்மோன்கள், உரம் ஆகியவற்றின் விகிதங்கள்

- 04 முதல் 08 மாதங்கள் வரை வயதான டென்ட்ரோபியம் ஓக்கிட்களது வளர்ச்சியில் உரம் மற்றும் ஹோர்மோன்களது விகிதங்களின் தாக்கம் பற்றி ஆய்வுகள் முன்னெடுக்கப்பட்டன.
- பெறுமதி கூடிய ட்ரெசீனா, சண்ட்ரியானா தாவரங்களின் சுழன்ற தண்டுகளை அலங்காரத்திற்காகப் பெற்றுக்கொள்ள ஒக்சீன், ஜிபரெல்லிக் அமிலம் மற்றும் ஒளியின் தாக்கம் பற்றிய ஆய்வு நிறைவு செய்யப்பட்டது.
- ஜெர்பரா பூக்களது உயர் தரத்தைப் பேண, சிலிக்கனின் தாக்கம் பற்றிய ஆய்வு முன்னெடுக்கப்பட்டது.
- உயிரியல் படலங்கள் - உயிரியல் பசளை / Biofilm- BioFertilizer பூச்செடிச் செய்கைக்கு உகந்ததா என்ற ஆய்வு ஆரம்பிக்கப்பட்டது.
- யானைகளது கழிவு மற்றும் இலைகுலைகள் உக்குவதனை (Biofilm- BioFertilizer மூலம்) துரிதப்படுத்துவதற்கான ஆய்வு நிறைவு செய்யப்பட்டது.
- அந்தூரியம் மற்றும் அலங்கார இலைத் தாவரங்களின் வளர்ச்சிக்கு யானைகளின் கழிவிலிருந்து தயாரிக்கப்படும் உரத்தைப் பயன்படுத்துவதன் பொருத்தப்பாடு பற்றிய ஆரம்ப ஆய்வொன்று மேற்கொள்ளப்பட்டது.

#### 5.6.1.2. Physiology (தாவர உடற்கூறியல்)

- அடிப்பாகம் அகற்றப்பட்ட பிலோடென்ட்றன் தாவரங்களில் புதிதாக கிளைகள் துளிர்ப்பதற்காக ஹோர்மோன்களைப் பயன்படுத்துவது பற்றிய ஆய்வு நிறைவு செய்யப்பட்டது.
- அடிப்பாகம் அகற்றப்பட்ட கோர்டிலயின் தாவரங்களில் புதிய கிளைகள் உருவாக்குவதற்கும் நீள்வதற்கும் ஹோர்மோன்களின் தாக்கம் பற்றிய ஆய்வு நிறைவு செய்யப்பட்டது.

#### 5.6.1.3. இழையப் பகுப்பு

- த்வராளா தாவரத்தின் இழையப் பகுப்பு மூலமான இனப்பெருக்கம் மற்றும் நுண்ணங்கிகளின் செயற்பாட்டுக்கு ஏற்படும் தாக்கம் பற்றிய ஆய்வு நிறைவு செய்யப்பட்டது.
- தேசிய தாவரவியல் பூங்காவினால் புதிதாக உற்பத்தி செய்யப்பட்ட அந்தூரியம் வகைகளுக்கு உரிய இழைய உருவாக்க முறைமைகள் பற்றிய ஆய்வுகள் முன்னெடுக்கப்பட்டன.
- இழையப் பகுப்பின் போது பயன்படுத்தப்படும் வளர்ப்பூடகங்களைக் கட்டிப்படுத்தப் பயன்படும் பல்வேறு பதார்த்தங்கள் (Gelling agent) காரணமாக டெண்ட்றோபியம் மற்றும் வெண்டா ஓக்கிட் இனங்களை இழையப் பகுப்பு செய்யும் போது ஏற்படும் தாக்கம் பற்றிய ஆய்வுகள் முன்னெடுக்கப்பட்டன.
- வளர்ப்பூடகங்களைக் கட்டிப்படுத்தப் பயன்படும் பல்வேறு பதார்த்தங்கள் (Gelling agent) மற்றும் ஊடகச் சேர்மானங்கள் (Media additives) காரணமாக இருவகை ஜெர்பரா தாவரங்களுக்கு இழையப் பகுப்பு செய்யும் போது ஏற்படும் தாக்கம் பற்றி ஆய்வு செய்யப்பட்டது.
- டெண்ட்றோபியம் ஓக்கிட் மற்றும் ஜெர்பரா வகைகள் இரண்டுக்கு இழையப் பகுப்பு வளர்ப்பு ஊடகமாகப் பயன்படுத்தப்படும் உள்ளீடுகள் பற்றி ஆய்வு செய்யப்பட்டது.

- பேணல் நடவடிக்கைகள் மற்றும் பூச்செடிச் செய்கை ஆகியவற்றுக்கு பயன்படுத்தும் முகமாக இலிங்கமில் டியுமான (*Chirita sp*, *Hopea modesta*, *Tabebia serratifolia*) தாவரங்களின் இனப்பெருக்கத்திற்கு இழையப் பகுப்பு தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துதல் பற்றிய ஆய்வுகள் முன்னெடுக்கப்பட்டன.

### 5.6.1.4. அறுவடைக்குப் பின்னரான தொழில்நுட்பம்

- போக்குவரத்தின் போது பழுதடையாமல் மல்லிகைப்பூ மொட்டுக்களை, நீண்ட காலத்துக்குப் பாதுகாத்துக் கொள்வதற்கான பொருத்தமான பொதியிடல் முறைமையைக் கண்டறிவதற்கான ஆய்வு நிறைவு செய்யப்பட்டது.
- மல்லிகைப் பூவின் வாசனையைப் பேணி அதனை உலர்த்துவதற்கான ஆய்வுகள் ஆரம்பிக்கப்பட்டன. .
- பூக்களின் வர்ணம் மாறாமல் அவற்றை உலர்த்துவதற்கான முறைமையைக் கண்டறிவதற்கான ஆய்வுகள் ஆரம்பிக்கப்பட்டன. .
-

## 5.7. கல்வி மற்றும் பயிற்சி

❖ **நிதி முன்னேற்றம்**

அனுமதிக்கப்பட்ட ஒதுக்கு :
மூலதனக் கொடுப்பனவுகளிலிருந்து ரூ .மில். 0.2
தா. பூ. நம்பிக்கை நிதியத்திலிருந்து ரூ .மில். 1
செலவு : ரூ.மில். 1.105

❖ **பௌதீக முன்னேற்றம்**

பேராதனை தாவரவியல் பூங்காவின் கல்வி மற்றும் பயிற்சி நிலையத்தின் வசதிகள் மேம்படுத்தப்பட்டன.

- இளைஞர்கள் 52 பேர் நவீன பூச்செடிச் செய்கை முறைமைகள் மற்றும் நில அலங்கார முறைமைகள் பற்றி மூன்று மாத சான்றிதழ் பாடநெறியினூடு பயிற்றுவிக்கப்பட்டனர்.



NVQ- level 4 **கற்கை நெறி மாணவர்கள்**

- நில அலங்கார அபிவிருத்தி உதவியாளர்களுக்கான தேசிய தொழில் பயிலுனர் தகைமைச் சான்றிதழ் - 4ம் மட்டத்தினை (NVQ- level 4) வழங்கும் ஒரு வருட டிப்ளோமா கற்கை நெறிக்கு மாணவர்கள் இணைத்துக் கொள்ளப்பட்டதோடு 19 பேர் தம்மைப் பதிவு செய்து கொண்டு கற்கையைத் தொடர்கின்றனர்.
- ரோசா வளர்ப்பு, நாற்றுமேடை முகாமை, தாவர அடையாளம் காணல், தாவர சத்திர சிகிச்சைகள், பூ அலங்காரம், அறுவடைக்குப் பின்னரான தொழில் நுட்பம், நில அலங்காரம் மற்றும் ஏனைய விடயங்கள் குறித்து 13,394 விண்ணப்பதாரிகளுக்கு

பயிற்சியளிக்கப்பட்டது. மேலும் உயிரினப் பல்வகைமை மற்றும் அதனைப் பாதுகாத்தல் பற்றி பாடசாலை மாணவர்கள் உள்ளிட்ட 1,292 பேருக்கு அறிவூட்டப்பட்டது.

## 5.8. மீகல்லாவ பசுமை இல்லப் பயிற்சி நிலையம்

❖ **நிதி முன்னேற்றம்**

அனுமதிக்கப்பட்ட ஒதுக்கு : ரூ .மில். **5**

செலவு : ரூ.மில். **4.996**

❖ **பௌதீக முன்னேற்றம்**

- 04ம் இலக்க கள அலுவலகக் கட்டிடத்தின் புனரமைப்புப் பணிகள் வடமேல் மாகாண பொறியியலாளர் அலுவலகத்தால் மேற்கொள்ளப்பட்டது. அதன் 2ம் கட்ட திருத்த வேலைகள் ஆரம்பிக்கப்பட்டு முன்னெடுத்துச் செல்லப்படுகின்றன.
- தாவர வளர்ப்பு நிகழ்ச்சித்திட்டம் முன்னெடுக்கப்பட்டு 38,316 கன்றுகள் உருவாக்கப்பட்டன.
- மீகல்லாவ பயிற்சி நிலையத்தின் நிர்வாக நடவடிக்கைகளுக்குத் தேவையான அலுவலக உபகரணங்களும் பூங்கா செயற்பாடுகளை மேம்படுத்தத் தேவையான இயந்திரங்களும் கொள்வனவு செய்யப்பட்டன.

## 5.9. மிரிஜ்ஜவில, உலர் வலய தாவரவியல் பூங்கா, அம்பாந்தோட்டை

❖ **நிதி முன்னேற்றம்**

அனுமதிக்கப்பட்ட ஒதுக்கு : ரூ .மில். **98.5**

தா. பூ. நம்பிக்கை நிதியத்திலிருந்து ரூ .மில். 2

செலவு : ரூ.மில். **100.257**



**நிர்மாணிக்கப்பட்ட தாவரப் பேணகம்**

❖ **பௌதீக முன்னேற்றம்**

பூங்காவின் அடிப்படை மற்றும் பொதுமக்களுக்கான வசதிகளை மேம்படுத்தும் பொருட்டு பல அபிவிருத்தித் திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டன.

- பொது மக்களுக்கு மத்தியில் குறிப்பாக உலர் வலயத் தாவரங்கள் பற்றிய அறிவை விருத்தி செய்யவும் அவற்றைப் பொதுமக்களுக்கு சமீபமாக்கவும் பேணிப்பாதுகாக்கவும் நிழலை விரும்பும் மற்றும் அரிய தாவரங்களை மக்களுக்குக் காண்பிக்கவுமென தாவரப் பேணகமொன்று நிர்மாணிக்கப்பட்டது.
- கள்ளித் தாவரங்களது பல்வகைமையைக் காண்பிக்கவும் அவை பற்றிய மக்களது அறிவை வளர்க்கவுமென கள்ளித் தாவரப் பேணகமொன்று நிர்மாணிக்கப்பட்டது.
- தொழிலாளர்கள் மற்றும் தொழில்நுட்ப வியலாளர்கள் அனைவரதும் வேலைத்தளங்களை ஒன்றிணைத்து அதற்காக பணியாளர் வசதிகள் கட்டிடமொன்று சகல வசதிகளுடனும் நிர்மாணிக்கப்பட்டது. இதற்கான ஆலோசனை சேவைகளை பொறியியல் பணிகள் குறித்த மத்திய ஆலோசனைப் பணியகம் வழங்கியது.

- தற்போதுள்ள பணியாளர் உத்தியோகபூர்வ இல்லங்கள் 02 க்கு மேலதிகமாக புதிதாக 02 இல்லங்கள் அமைக்கப்பட்டன.
- பூங்காவினதும் பிரதேசத்தினதும் பூச்செடியியல் அபிவிருத்தியை இலக்காகக்கொண்டு ஒரு ஆய்வுகூடம் நிர்மாணிக்கப்பட்டது. அதற்கான இயந்திரங்களும் கருவிகளும் கொள்வனவு செய்யப்பட்டு தற்போது ஆய்வுகள் மேற்கொள்ளப்படுகின்றன.
- பார்வையாளர்களின் பாவனைக்கென புதிதாக உணவகமொன்று நிர்மாணிக்கப்பட்டது.
- பூங்காவின் சில பகுதிகளது புறத்தோற்றத்தையும் அதன் பாதைகளது தரத்தையும் மேம்படுத்த உள்ளக வீதிகளுக்கு இண்டர்லொக் கற்கள் பொருத்தப்பட்டதோடு, பிரதான வீதிகளுக்கு தார் மற்றும் காபட் இடப்பட்டது.



**பார்வையாளர்களின் பாவனைக்கென புதிதாக நிர்மாணிக்கப்பட்ட உணவகம்**



**பூங்காவில் கள்ளித் தாவரப் பேணகமொன்று நிர்மாணிக்கப்பட்டது.**

- பூங்காவுக்கான பார்வையாளர்களின் வருகையை அதிகரித்துக்கொள்ளும் நோக்கில் பூங்காவின் முன் புறமாக அமைந்துள்ள நுழைவாயிலுக்கு மேலதிகமாக திஸ்ஸ - கதிர்காமம் வீதியை முன்னோக்கி புதிய நுழைவுச்சீட்டுக் கருமபீடமொன்று நிர்மாணிக்கப்பட்டு பொது மக்களுக்காகத் திறந்து வைக்கப்பட்டுள்ளது.
- பூங்காவைச் சூழ பாதுகாப்பு வேலி அமைக்கப்பட்டது.
- பூங்காவின் நில அலங்கார வடிவமைப்பை மேம்படுத்த அலங்காரத் தாவரங்களைக் கொண்ட பூந்தோட்டங்கள், அடிப்பாதைகள் மற்றும் ஏனைய அம்சங்கள் அபிவிருத்தி செய்யப்பட்டு கள அபிவிருத்திப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன.



**திஸ்ஸ - கதிர்காமம் வீதியை முன்னோக்கி அமைக்கப்பட்டுள்ள புதிய நுழைவாயில்**

- பிரதேசத்தைச் சேர்ந்த பூ வளர்ப்போருக்கு வசதியளிக்கும் வகையில் பூங்காவின் பூச்செடியியல் அபிவிருத்திப் பணிகள் மேம்படுத்தப்பட்டுள்ளன. பூங்காவின் உயிர்த் தாவரச்சேகரிப்பு மேம்படுத்தப்பட்டுள்ளதோடு, பூச்செடியியல் விரிவாக்க அலுவலகத்தின் வசதிகளும் மேம்படுத்தப்பட்டுள்ளன. பிரதேசத்தைச் சேர்ந்த பூ வளர்ப்போரை ஊக்குவித்து அவர்களது இயலுமையை விருத்தி செய்வதற்குத் தேவையான தொழில்நுட்ப அறிவை வழங்கவென செயலமர்வுகளும் பயிற்சிச் செயலமர்வுகளும் நடத்தப்பட்டன.
- பூங்காவின் உயிர்த் தாவரச் சேகரிப்புக்கு புதிய தாவர வகைகள் சேர்க்கப்பட்டு தாவரச் சேகரிப்பு பலப்படுத்தப்பட்டு, தாவரப் பேணுகை நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன. மேலும் இப்பூங்காவில் 30,850 தாவரக் கன்றுகள் உற்பத்தி செய்யப்பட்டன.

- பூங்காவைப் பார்வையிடும் வசதிகளை வழங்கவென தற்போது பூங்காவினுள் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ள 4 பற்றறி கார்களுக்கு மேலதிகமாக மேலும் ஒரு கார் கொள்வனவு செய்யப்பட்டு சேவையில் ஈடுபடுத்தப்பட்டது.

## 5.10. சீதாவக ஈர வலய தாவாரவியல் பூங்கா, அவிசாவலை

- **நிதி முன்னேற்றம்**
- **பௌதீக முன்னேற்றம்**

| |
|---|
| அனுமதிக்கப்பட்ட ஒதுக்கு : |
| மூலதனக் கொடுப்பனவுகளிலிருந்து ரூ. 25 மில். |
| தா. பூ. நம்பிக்கை நிதியத்திலிருந்து ரூ. 5 மில். |
| செலவு : ரூ.மில். 29.68 |



**நிர்மாணிக்கப்பட்ட ஜப்பான் பூங்கா**

பூங்காவினுள் பார்வையாளர்களுக்கான வசதிகளை ஏற்படுத்தவும் பேணுகை நடவடிக்கைகளை உயர் மட்டத்தில் மேற்கொள்ளவும் பூங்காவினுள் புதிய வசதிகளை ஏற்படுத்தவும் பல்வேறு அபிவிருத்திப் பணிகள் முன்னெடுக்கப்பட்டன.

- வனப்பூங்காவின் அழகிய சுற்றுச்சூழலின் ஊடு பூங்காவின் உயர் பகுதியைப் பார்வையிடச் செல்லும் பாதையில் பார்வையிடும் தளமொன்றை நிர்மாணிக்கும் பணிகள் நிறைவடைந்துள்ளன. இங்கிருந்து பார்க்கும் போது முழுப் பூங்காவினதும் அழகிய காட்சியைக் கண்டு களிக்க முடியும்.
- பூங்காவுக்குப் புதிதாக சுவீகரிக்கபப்ட்ட பகுதியில் காணப்பட்ட பழைய கட்டிடங்கள் 02ம் உத்தியோகபூர்வ இல்லங்களாக அபிவிருத்தி செய்யப்பட்டன.
- பூங்காவின் பாதைகளது தரத்தை மேம்படுத்த அவற்றுக்கு இண்டர்லொக் கற்கள் பொருத்தப்பட்டன.
- பூங்காவின் நில அலங்கார வடிவமைப்பை மேம்படுத்த ஜப்பான் தோட்டமொன்று அமைக்கப்பட்டதோடு, 02 வசந்த இல்லங்களை நிர்மாணிக்கும் பணிகள் முன்னெடுக்கப்பட்டு 95 % வேலைகள் நிறைவடைந்துள்ளன. 2017ம் ஆண்டில் அனைத்து நிர்மாணப்பணிகளும் பூர்த்தியாக்கப்படவுள்ளன.



**பூங்காவில் நிர்மாணிக்கப்பட்டுள்ள பார்வையிடு தளம்**

- பார்வையாளர்களின் பாவனைக்கென புதிதாக உணவகமொன்று நிர்மாணிக்கப்பட்டது.

- பூங்காவினுள் குடி நீர்த் தொகுதியொன்றை ஸ்தாபிக்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டதோடு, நீர்த் தாங்கியொன்றும் நிர்மாணிக்கப்பட்டது.
- பூங்காவைச் சூழ பாதுகாப்பு வேலி அமைக்கும் பொருட்டு தேவையான பொருட்கள் கொள்வனவு செய்யப்பட்டு அப்பணிகள் நிறைவு செய்யப்பட்டன.
- பூங்காவின் நில அலங்கார வடிவமைப்பை மேம்படுத்த அலங்காரத் தாவரங்களைக் கொண்ட பூந்தோட்டங்கள், அடிப்பாதைகள் மற்றும் ஏனைய அம்சங்கள் அபிவிருத்தி செய்யப்பட்டு கள அபிவிருத்திப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன.
- பூங்காவின் உயிர்த் தாவரச் சேகரிப்புக்கு புதிய தாவர வகைகள் சேர்க்கப்பட்டு தாவரச் சேகரிப்பு பலப்படுத்தப்பட்டு, தாவரப் பேணுகை நடவடிக்கைள் முன்னெடுக்கப்பட்டன. மேலும் இப்பூங்காவில் 71,085 தாவரக் கன்றுகள் உற்பத்தி செய்யப்பட்டன.
- பார்வையாளர்களுக்குத் தேவையான தகவல்களை வழங்குவதற்கான தகவல் நிலையமொன்றை ஸ்தாபிப்பதற்குத் தேவையான தகவல்களை உள்ளடக்கிய பிரசுரங்கள், விபரப் பலகைகள் ஆகியன தயாரிக்கப்பட்டு காட்சிப்படுத்தபப்பட்டுள்ளன.



**நிர்மாணிக்கப்பட்டு வரும் வசந்த இல்லம்**



**பார்வையாளர்களின் பாவனைக்காக நிர்மாணிக்கப்பட்ட உணவகம்**

அனைத்துப் பூங்காக்களையும் செயற்றிறன் மிக்க வகையில் முகாமைதத்துவம் செய்வதற்குத் தேவையான புதிய பொறிகள், இயந்திரங்கள், கருவிகள் மற்றும் பூங்கா உபகரணங்கள் ஆகியன கொள்வனவு செய்யப்பட்டதோடு, இருக்கும் இயந்திரங்கள், கருவிகள் மற்றும் பூங்கா உபகரணங்கள் மேம்படுத்தப்பட்டு பூங்காக்களின் அலங்காரம் உயரிய முறையில் பேணப்பட்டன.



**பூங்காவின் தகவல் நிலையம்**

# 6. திணைக்களத்தின்  ஏனைய அலகுகளின் முகாமை

## 6.1 அதிமேதகு ஜனாதிபதி மற்றும் மாண்புமிகு பிரதமர் ஆகியோரது உத்தியோகபூர்வ இல்லங்கள்

அதிமேதகு ஜனாதிபதி அவர்களது கொழும்பு 01, கண்டி, நுவரெலியா, அனுராதபுரம் ஆகிய பிரதேசங்களில் அமைந்துள்ள ஜனாதிபதி மாளிகைகள், மாண்புமிகு பிரதமர் அவர்களது கொழும்பு அலரி மாளிகை மற்றும் நுவரெலியா வாசஸ்தலம் ஆகியவற்றின் பூங்காக்கள் சிறந்த முறையில் பேணப்பட்டன.

அதிமேதகு ஜனாதிபதி மற்றும்  மாண்புமிகு பிரதமர் ஆகியோரது உத்தியோகபூர்வ வாசசதலங்களது பூங்காக்களை அழகுபடுத்தி ஒழுங்குபடுத்துவதற்கென திட்டமிடப்பட்ட பிரகாரம் அபிவிருத்திப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன.

## 6.2 அனுராதபுர புனித வெள்ளரச மரம்

அனுராதபுர புனித வெள்ளரச மரத்தின் ஆரோக்கியம் பேணல் நடவடிக்கைகள் இவ்வருடமும் முன்னெடுக்கப்பட்டன.

## 6.3. பொது நலவாய போர் சமாதிகள் அலகு

கண்டி, ஜாவத்த, பொரல்ல, மற்றும் திருகோணமலை ஆகிய இடங்களில் அமைந்துள்ள பொது நலவாய போர் சமாதிகளது பேணுகைப் பணிகள் மற்றும் முகாமை நடவடிக்கைகள் சிறந்த முறையில் மேற்கொள்ளப்பட்டன.



**ஜாவத்த பொது நலவாய போர் சமாதி**

## 6.4. தாவரவியல் பூங்காக்கள் நம்பிக்கை நிதியம்

இலங்கையின் தாவரவியல் பூங்காக்களை அபிவிருத்தி செய்வதற்கும் அவற்றின் நலன்புரி நடவடிக்கைகளுக்குமான நம்பிக்கை நிதியம் என்ற பெயரில் அப்போதைய விவசாய, காணி மற்றும் வனவள அமைச்சரினால் சமர்ப்பிக்கப்பட்ட 1995-12-15ம் திகதிய அமைச்சரவைப் பத்திரத்தை கருத்திற்கொண்டு 1996-02-07ம் திகதி நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் தாவரவியல் பூங்காக்களை அபிவிருத்தி செய்வதற்கும் அவற்றின் நலன்புரி நடவடிக்கைகளுக்குமான நம்பிக்கை நிதியத்தை ஏற்படுத்துவதற்கான அனுமதி வழங்கப்பட்டது.

தாவரவியல் பூங்காக்களுக்கான நுழைவுச் சீட்டு விற்பனையின் மூலம் கிடைக்கும் வருமானத்தில் 25%த்தை வருடாந்தம், தாவரவியல் பூங்காக்களை அபிவிருத்தி செய்வதற்கும் அவற்றின் நலன்புரி நடவடிக்கைகளுக்குமான நம்பிக்கை நிதியத்திற்கான வருமானமாக ஒதுக்கீடு செய்யப்படும். நம்பிக்கை நிதியத்தின் குறிக்கோள்களாவன :

- இலங்கையிலும் வெளிநாடுகளிலும் எமது தாவரவியல் பூங்காக்கள் தொடர்பில் நிலவும் அபிப்பிராயங்களை மேம்படுத்தும் நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.
- கல்வியியல் நிகழ்ச்சித் திட்டங்களை நடைமுறைப்படுத்துதல் மற்றும் தாவரங்களைப் பாதுகாத்தல்.

- தாவரவியல் பூங்காக்களின் வசதிகளை மேம்படுத்துவதோடு உபகரணங்களைக் கொள்வனவு செய்வதற்கு நிதியுதவி வழங்குதல்.
- தாவரவியல் பூங்காக்களின் அபிவிருத்தி மற்றும் தொழில்நுட்ப, கல்வியியல் மற்றும் பயிற்சி சார் செயற்பாடுகளை மேம்படுத்த நிதியுதவி வழங்குதல்.
- தாவரவியல் பூங்காவிற்கு வருகை தருகின்ற விஞ்ஞானிகளுக்கும் மற்றும் விஷேட பிரதிநிதிகளுக்கும் தேவையான வசதிகளைச் செய்துகொடுப்பதற்குத் தேவையான அவசர நிர்மாண மற்றும் பேணல் நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.
- திட்டமிடப்பட்ட விஷேட நிகழ்ச்சித் திட்டங்களுக்குத் தேவையான மீண்டெழும் செலவினங்களை ஈடு செய்தல்.

இந்நிதியத்தின் நிதி உதவியின் கீழ் 2016ம் ஆண்டில் பூங்காக்களின் அபிவிருத்தி நடவடிக்கைகள் நடைமுறைப்படுத்தப்பட்டதோடு பூங்காக்களின் தரம் மேலாகப் பேணப்பட்டன.

2016ம் ஆண்டில் இந்நிதியத்தின் வருடாந்த மூலதன ஒதுக்கு 140 மில்லியன் ரூபாய்களாகும். பூங்காக்களின் அபிவிருத்திக்காக அதில் 139.9 (100 %) மில்லியன் ரூபா பயன்படுத்தப்பட்டது.

## 7. 2016ம் ஆண்டிலான உள்ளக இடமாற்றம், சம்பள உயர்வு, ஏனைய பணிகள்

### 7.1 பணியில் இணைத்துக்கொள்ளப்பட்டோர் - வர்த்தமானி அறிவித்தல் மூலம்

| பதவி | நிலவிய வெற்றிடங்கள் | இணைத்துக்கொள்ளப்பட்டோர் |
|---|---|---|
| உள்ளகக் கணக்காய்வாளர் | 1 | 1 |
| தகவல் மற்றும் தொடர்பாடல் உதவியாளர் | 2 | 1 |
| பூங்கா வேலை மேற்பார்வையாளர் | 2 | 1 |
| உதவி சுற்றுலா விடுதிப் பொறுப்பாளர் | 4 | 4 |
| கட்டண அறவீட்டு உதவியாளர் | 18 | 18 |
| ஆராய்ச்சி உப உதவியாளர் | 2 | 1 |
| பூங்கா சிறு மேற்பார்வையாளர்கள் | 14 | 9 |
| லொறி சுத்திகரிப்பாளர் | 2 | 2 |
| லேபல் எழுதுனர் | 1 | 1 |
| **மொத்தம்** | **46** | **38** |

## 7.2. 2016ம் ஆண்டில் ஓய்வு பெற்றோர் மற்றும் மரணித்தோர்

| பதவி | எண்ணிக்கை |
|---|---|
| பணிப்பாளர் நாயகம் | 01 |
| பூங்கா அபிவிருத்தி உதவியாளர் | 01 |
| முகாமைத்துவ உதவியாளர் | 03 |
| தொழிலாளர் | 10 |
| காவலாளர் | 02 |
| களஞ்சியப் பொறுப்பாளர் | 01 |
| அலுவலக உதவியாளர் | 01 |
| சாரதி | 01 |
| **மொத்தம்** | **20** |

## 7.3. 2016ம் ஆண்டில் இடமாற்றம் பெற்றவர்கள்

| பதவி | திணைக்களத்திலிருந்து வெளியில் சென்றவர்கள் | திணைக்களத்துக்கு வந்தோர் |
|---|---|---|
| முகாமைத்துவ உதவியாளர்கள் | 03 | 07 |
| அபிவிருத்தி அலுவலர் | - | 05 |
| கட்டண அறவீட்டு உதவியாளர் * | 03 | - |
| அலுவலக உதவியாளர் | 03 | 01 |
| சாரதி | - | 03 |
| பூங்கா வேலை மேற்பார்வையாளர் * | 01 | - |
| காவலாளர் * | 02 | - |
| தொழிலாளர் * | 01 | - |
| **மொத்தம்** | **13** | **16** |

*** பதவி உயர்வு காரணமாக இடமாற்றம் பெற்றனர்.**

## 7.4. உள்ளக பதவி உயர்வு காரணமாக பதவியிலிருந்து நீங்கல்.

| முன்னைய பதவி | தற்போதைய பதவி | எண்ணிக்கை |
|---|---|---|
| பிரதிப் பணிப்பாளர் (நிதி) | பிரதான உள்ளகக் கணக்காய்வாளர் | 1 |
| மரப் பராமரிப்பாளர் | பூங்கா சிறு மேற்பார்வையாளர் | 2 |
| நாற்றுமேடையாளர் | பூங்கா சிறு மேற்பார்வையாளர் | 1 |
| ஆராய்ச்சி உப உதவியாளர் | பூங்கா சிறு மேற்பார்வையாளர் | 1 |
| தொழிலாளர் | பூங்கா சிறு மேற்பார்வையாளர் | 5 |
| தொழிலாளர் | ஆராய்ச்சி உப உதவியாளர் | 1 |
| தொழிலாளர் | கட்டண அறவீட்டு உதவியாளர் | 2 |
| காவலாளர் | கட்டண அறவீட்டு உதவியாளர் | 1 |
| லேபல் எழுதுனர் | கட்டண அறவீட்டு உதவியாளர் | 1 |

## 8. பணியாளர் பயிற்சி மற்றும் இயலுமை விருத்தி

### 8.1. பணியாளர்களுக்கான திணைக்களத்தின் மூலமான பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள் (வெளிநாடு)

| இல. | நிகழ்ச்சித் திட்டம் | நாடு | கால அளவு | வெளிநாடு சென்ற அலுவலர் |
|---|---|---|---|---|
| 1. | இணைந்த தாவர வகைப்படுத்தல், இனம் காணல் மற்றும் களக் கண்டாய்தல் நுட்பங்கள் பற்றிய கற்கைநெறி | இங்கிலாந்து | 2016 செப்டம்பர் 12-23 | திருமதி நதீகா குணவர்தன - பொறுப்பதிகாரி, தேசிய தாவரக்கயம் |
| 2. | தாவரவியல் பூங்கா அபிவிருத்தி மற்றும் முகாமை பற்றிய கற்கைநெறி | சீனா | 2016 செப்டம்பர் 08 ஒக்டோபர் 07 | திருமதி அச்சலா அத்தநாயக்க - பிரதிப் பணிப்பாளர், பேராதனை தாவரவியல் பூங்கா, திரு M.M.D.J. சேனாரத்ன - உதவிப் பணிப்பாளர், கம்பஹா தாவரவியல் பூங்கா |
| 3. | பூகோள புவியியல் முக்கியத்துவம் வாய்ந்த பிரதேசங்கள் / பூங்கா முகாமை பற்றிய பயிற்சி நெறி | மலேசியா | 2016 மே 16 -21 | திருமதி M.C. விக்ரமசிங்ஹ - உதவிப் பணிப்பாளர், கம்பஹா தாவரவியல் பூங்கா |

### 1.2. பணியாளர்களுக்காக நடாத்தப்பட்ட திணைக்களத்தின் பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள் (உள் நாடு)

1.3.

| இல. | நிகழ்ச்சித் திட்டம் | திகதி | நடந்த இடம் | இலக்குக் குழு |
|---|---|---|---|---|
| 1. | உள விருத்தி பயிற்சி நிகழ்ச்சி | 2016.01.25 | கல்வி மற்றும் பயிற்சி நிலையம், பேராதனை | பூங்கா சிற்றூழியர்கள் |
| 2. | முகாமைத்துவ ஆற்றல்கள் விருத்தி பயிற்சி நிகழ்ச்சி | 2016.09.26 | கல்வி மற்றும் பயிற்சி நிலையம், பேராதனை | முகாமைத்துவ உதவியாளர்கள் மற்றும் அலகுப் பிரதானிகள் |
| 3. | பூங்கா சிறு மேற்பார்வையாளர்களுக் கான பயிற்சி நிகழ்ச்சி | 2016.10.11 | கல்வி மற்றும் பயிற்சி நிலையம், பேராதனை | பூங்கா சிறு மேற்பார்வையாளர்கள் 12 |
| 4. | அலுவலக முகாமை பயிற்சி நிகழ்ச்சி | 2016.11.24 2016.11.25 | கல்வி மற்றும் பயிற்சி நிலையம், பேராதனை | முகாமைத்துவ உதவியாளர்கள் மற்றும் அலகுப் பிரதானிகள் |

| | | | | |
|---|---|---|---|---|
| 5. | இசை நிகழ்ச்சி | 2016.11.25 | கல்வி மற்றும் பயிற்சி நிலையம், பேராதனை | அனைத்து ஊழியர்களும் |
| 6. | சாரதிகள் பயிற்சி | 2016.12.09 | கல்வி மற்றும் பயிற்சி நிலையம், பேராதனை | சாரதிகள் |

## 1.4. பணியாளர்கள் வெளி நிறுவனங்களில் பெற்ற பயிற்சிகள்

| இல. | நிகழ்ச்சித் திட்டம் | திகதி | கலந்து கொண்டோர் | சேவை வகை |
|---|---|---|---|---|
| 1. | உள மற்றும் ஆற்றல் விருத்தி பயிற்சி நிகழ்ச்சி | 2016.02.03 | 01 | இலங்கை நிர்வாக சேவை |
| 2. | அரச ஆவண முகாமை மற்றும் பேணல் பற்றிய ஒரு நாள் செயலமர்வு | 2016.03.17 | 01 | அபிவிருத்தி அலுவலர் |
| 3. | விடுமுறை இலிகிதர்களது பணிகள் | 2016.05.16 | 01 | முகாமைத்துவ உதவியாளர் |
| 4. | செயற்திட்ட வரைவு மற்றும் திட்டமிடல் | 2016.06.16<br>2016.06.17<br>2016.06.20 | 02 | இலங்கை தொழில்நுட்ப சேவை |
| 5. | அரச கேள்வி மனுக் கோரல் செயன்முறை | 2016.07.04 | 02 | முகாமைத்துவ சேவை |

## 9. 2017 ம் ஆண்டுக்கான எதிர்காலத் திட்டங்கள்

| செயற்திட்டத்தின் பெயர் | நிதித் தேவை (ரூ. மில்.) | நிதி மூலம் |
|---|---|---|
| **மிரிஜ்ஜவில உலர் வலய தாவரவியல் பூங்கா** | | |
| புதிய கருவிகள், அலுவலக உபகரணங்கள் மற்றும் இயந்திரங்களைக் கொள்வனவு செய்தலும் பழுதுபார்த்தலும் | *1.3* | கூட்டு நிதியம் |
| தாவர இனப்பெருக்கத்துக்கான ஆய்வுகூடம் மற்றும் விதைகள் அறை நிர்மாணம் | *2* | கூட்டு நிதியம் |
| புதிய அலுவலகம், சிறிய தாவரக்கயம், கலந்துரையாடல் அறை, நூலகம் ஆகியவற்றுடனான பார்வையாளர் மத்திய நிலையமொன்றை தெற்கு நுழைவாயில் அருகில் அமைத்தல் | *14* | கூட்டு நிதியம் |
| தெற்கு நுழைவாயில் அருகில் இரண்டு வசந்த இல்லங்களை அமைத்தல் | *5* | கூட்டு நிதியம் |
| பூச்செடியியல் கண்காட்சி மத்திய நிலையமொன்றை அமைத்தல் | *5* | கூட்டு நிதியம் |
| ஆண்கள் மற்றும் பெண்களுக்கான தனி நபர் தங்குமிடத் தொகுதியொன்றை நிர்மாணித்தல் | *9* | கூட்டு நிதியம் |
| உள்ளக வீதி அபிவிருத்திப்பணிகளை நிறைவு செய்தல் | *10* | கூட்டு நிதியம் |
| தாவர வளர்ப்பு நிகழ்ச்சித்திட்டத்தின் ஊடாக தாவரச் சேகரிப்புகளை மேம்படுத்துதல், தாவர வெளிவாரிப் பேணுகை நிகழ்ச்சித் திட்டங்களை அமுல்படுத்துதல் | 4 | கூட்டு நிதியம் |
| தாவரங்களுக்கு லேபலிடல், விஷேட தாவரங்கள் குறித்து விபரமான லேபல்களைப் பொருத்துதல் | 1 | கூட்டு நிதியம் |
| காணி அபிவிருத்தியும் ஏனைய பேணுகை நடவடிக்கைகளும் | *7* | கூட்டு நிதியம் |
| முறைமைப் பூங்கா அபிவிருத்தி | *6* | கூட்டு நிதியம் |
| தெற்கு நுழைவாயில் அருகில் வாகனத் தரிப்பிடம் அமைத்தல் | *5* | கூட்டு நிதியம் |
| உத்தியோகபூர்வ இல்லம், ஊழியர் பயன்பாட்டுக் கட்டிடம் ஆகியனவற்றின் நிர்மாணப்பணிகளை நிறைவு செய்தல் | *3* | கூட்டு நிதியம் |
| நிழல் இல்லமொன்றை அமைத்தல் | *3* | கூட்டு நிதியம் |
| **தேவையான மொத்த ஒதுக்கீடு** | *75.3* | |
| **இலுக்கோவிட ஈர வலய தாவரவியல் பூங்கா** | | |
| புதிய கருவிகள், அலுவலக உபகரணங்கள் மற்றும் இயந்திரங்களைக் கொள்வனவு செய்தலும் பழுதுபார்த்தலும் | *1.7* | கூட்டு நிதியம் |
| அலுவலகக் கட்டிட நிர்மாணம் - கட்டம் 1 | *5* | கூட்டு நிதியம் |
| புதிய கழிவறையொன்றை நிர்மாணித்தல் | *2* | கூட்டு நிதியம் |
| தோணித் தரிப்பிடம் ஒன்றை நிர்மாணித்தல் | *2* | தாவரவியல் பூங்காக்கள் நிதியம் |
| தாவர வளர்ப்பு நிகழ்ச்சித்திட்டமும் தாவரச் சேகரிப்புகளை மேம்படுத்துதலும் தாவர வெளிவாரிப் பேணுகை நிகழ்ச்சித் திட்டங்களை அமுல்படுத்துதலும் | 0.5 | கூட்டு நிதியம் |
| தாவரங்களுக்கு லேபலிடல், விஷேட தாவரங்கள் குறித்து விபரமான லேபல்களைப் பொருத்துதல் | *0.1* | கூட்டு நிதியம் |
| குடி நீர்த் தொகுதியொன்றை அமைத்தல் - கட்டம் 2 | 0.*4* | கூட்டு நிதியம் |
| காணி அபிவிருத்தியும் ஏனைய பேணுகை நடவடிக்கைகளும் | *7.85* | கூட்டு நிதியம் |
| பூங்காவுக்கான பாதுகாப்பு வேலி அமைத்தல் | *4.5* | கூட்டு நிதியம் |
| நிழல் இல்லமொன்றை அமைத்தல் | *1.5* | கூட்டு நிதியம் |
| **தேவையான மொத்த ஒதுக்கீடு** | *27.55* | |
| **ஹெனரத்கொட தாவரவியல் பூங்கா, கம்பஹா** | | |

| | | |
|---|---|---|
| புதிய கருவிகள், அலுவலக உபகரணங்கள் மற்றும் இயந்திரங்களைக் கொள்வனவு செய்தலும் பழுதுபார்த்தலும் | *1.9* | கூட்டு நிதியம் |
| களத் தொழிலாளர்களுக்கு சேவை அலகொன்றை அமைத்தல் | *4* | கூட்டு நிதியம் |
| புதிய வாகன நிறுத்துமிடமொன்றை அமைத்தல் | *2* | கூட்டு நிதியம் |
| சூரிய மின் சக்தி அலகொன்றை அமைத்தல் | *1.5* | கூட்டு நிதியம் |
| தாவர வளர்ப்பு நிகழ்ச்சித்திட்டமும் தாவரச் சேகரிப்புகளை மேம்படுத்துதலும் தாவர வெளிவாரிப் பேணுகை நிகழ்ச்சித் திட்டங்களை அமுல்படுத்துதலும் | *1* | கூட்டு நிதியம் |
| தாவரங்களுக்கு லேபலிடல், விஷேட தாவரங்கள் குறித்து விபரமான லேபல்களைப் பொருத்துதல் | *0.25* | கூட்டு நிதியம் |
| உள்ளக வீதி அபிவிருத்தி | *1* | கூட்டு நிதியம் |
| காணி அபிவிருத்தியும் ஏனைய பேணுகை நடவடிக்கைகளும் | *2.5* | கூட்டு நிதியம் |
| நீர் வழங்கல் தொகுதியை இற்றைப்படுத்துதல் | *0.5* | கூட்டு நிதியம் |
| ஓக்கிட் இல்ல நிர்மாணப் பணிகளை நிறைவு செய்தல் | *5* | தாவரவியல் பூங்காக்கள் நிதியம் |
| பூங்காவுக்கான பாதுகாப்பு வேலிப் புனரமைத்தல் பணிகளை நிறைவு செய்தல் | *3* | தாவரவியல் பூங்காக்கள் நிதியம் |
| அத்தனகலு ஓயா கரைப் பாதுகாப்பு | *7* | தாவரவியல் பூங்காக்கள் நிதியம் |
| கட்டிடங்கள் மற்றும் பல்வேறு கட்டமைப்புக்கள் புனரமைப்பு | *3* | தாவரவியல் பூங்காக்கள் நிதியம் |
| பூங்காவில் பூ மாதிரி வடிவங்களை அமைத்தல் | *2* | தாவரவியல் பூங்காக்கள் நிதியம் |
| தாவரங்கள் பற்றிய தகவல்களைப் பொதுமக்களுக்கு வழங்கல் | *0.5* | தாவரவியல் பூங்காக்கள் நிதியம் |
| **தேவையான மொத்த ஒதுக்கீடு** | *35.15* | |
| **கனேவத்த மூலிகைத் தாவரப் பூங்கா அபிவிருத்தி** | | கூட்டு நிதியம் |
| புதிய கருவிகள், அலுவலக உபகரணங்கள் மற்றும் இயந்திரங்களைக் கொள்வனவு செய்தல் | *0.6* | கூட்டு நிதியம் |
| கன்று உற்பத்திக்காக நிழல் இல்லமொன்றை அமைத்தல் | *0.7* | கூட்டு நிதியம் |
| பார்வையாளர்களுக்காக குடிநீர் வசதி மற்றும் ஆசனங்களை அமைத்தல் | 0.5 | கூட்டு நிதியம் |
| மழைநீரைச் சேகரிப்பதற்கான வசதியை ஏற்படுத்தல் | *0.4* | கூட்டு நிதியம் |
| சூரிய மின் சக்தி அலகொன்றை அமைத்தல் | *1.5* | கூட்டு நிதியம் |
| தாவர இல்லமொன்றை அமைத்தல் | *2.3* | கூட்டு நிதியம் |
| பூங்கா ஊழியர்களுக்கு கள அலுவலகமொன்றை அமைத்தல் | *1.5* | கூட்டு நிதியம் |
| தாவரங்கள் பற்றிய தகவல்களைப் பொதுமக்களுக்கு வழங்கல் | *0.3* | தாவரவியல் பூங்காக்கள் நிதியம் |
| தாவரக்கய அபிவிருத்தி | *0.8* | தாவரவியல் பூங்காக்கள் நிதியம் |
| தாவர வளர்ப்பு நிகழ்ச்சித்திட்டமும் தாவரச் சேகரிப்புகளை மேம்படுத்துதலும் தாவர வெளிவாரிப் பேணுகை நிகழ்ச்சித் திட்டங்களை அமுல்படுத்துதலும் | *1* | கூட்டு நிதியம் |
| தாவரங்களுக்கு லேபலிடல், விஷேட தாவரங்கள் குறித்து விபரமான லேபல்களைப் பொருத்துதல் | *0.25* | கூட்டு நிதியம் |
| காணி அபிவிருத்தி, மூலிகைத் தாவரச் செய்கை விரிவாக்கம் மற்றும் ஏனைய பேணுகை நடவடிக்கைள் | *1.75* | கூட்டு நிதியம் |
| நீர்த் தாவர சேகரிப்பு ஒன்றை அமைக்க இரண்டு குளங்களை நிர்மாணித்தல் | *0.75* | கூட்டு நிதியம் |

| | | |
|---|---|---|
| **தேவையான மொத்த ஒதுக்கீடு** | *12.35* | |
| **ஹக்கல தாவரவியல் பூங்கா** | | |
| கட்டிடங்கள், உத்தியோகபூர்வ இல்லங்கள், இயந்திரங்கள் மற்றும் வாகனங்களை நவீனமயப்படுத்தல் | *0.6* | கூட்டு நிதியம் |
| புதிய கருவிகள், அலுவலக உபகரணங்கள், இயந்திரங்கள் கொள்வனவு | *0.4* | கூட்டு நிதியம் |
| கழிவறைகளுக்கான கழிவு நீர் சுத்திகரிப்புக் குழியொன்றை நிர்மாணித்தல் | *1* | கூட்டு நிதியம் |
| இரண்டு கழிவறைகளை அமைத்தல் | *2* | கூட்டு நிதியம் |
| பாதுகாப்பு வேலி அமைத்தல் | *3* | தாவரவியல் பூங்காக்கள் நிதியம் |
| உத்தியோகபூர்வ இல்ல நிர்மாணம் | *9* | தாவரவியல் பூங்காக்கள் நிதியம் |
| உள்ளக வீதி அபிவிருத்தி | *5* | தாவரவியல் பூங்காக்கள் நிதியம் |
| கழிவு முகாமைத் தொகுதியொன்றை அமைத்தல் | *2* | தாவரவியல் பூங்காக்கள் நிதியம் |
| தாவர வளர்ப்பு நிகழ்ச்சித்திட்டமும் தாவரச் சேகரிப்புகளை மேம்படுத்துதலும் தாவர வெளிவாரிப் பேணுகை நிகழ்ச்சித் திட்டங்களை அமுல்படுத்துதலும் | *1* | தாவரவியல் பூங்காக்கள் நிதியம் |
| தாவரங்களுக்கு லேபலிடல், விஷேட தாவரங்கள் குறித்து விபரமான லேபல்களைப் பொருத்துதல் | *0.5* | தாவரவியல் பூங்காக்கள் நிதியம் |
| தாவரங்கள் குறித்த தகவல்களைப் பொதுமக்களுக்கு வழங்கல் | *1* | தாவரவியல் பூங்காக்கள் நிதியம் |
| காணி அபிவிருத்தியும் ஏனைய பேணுகை நடவடிக்கைகளும் | *12.5* | தாவரவியல் பூங்காக்கள் நிதியம் |
| வாகனத் தரிப்பிடமொன்றை அமைத்தல் | *7* | தாவரவியல் பூங்காக்கள் நிதியம் |
| பூங்கா நுழைவாயிலோன்றை அமைத்தல் | *3* | தாவரவியல் பூங்காக்கள் நிதியம் |
| **தேவையான மொத்த ஒதுக்கீடு** | *48* | |
| **பேராதனை அரசதாவரவியல் பூங்கா** | | |
| கட்டிடங்கள், உத்தியோகபூர்வ இல்லங்கள், இயந்திரங்கள் மற்றும் வாகனங்களை நவீனமயப்படுத்தல் | *6.8* | கூட்டு நிதியம் |
| புதிய கருவிகள், அலுவலக உபகரணங்கள், இயந்திரங்கள் கொள்வனவு | *1.5* | கூட்டு நிதியம் / தாவரவியல் பூங்காக்கள் நிதியம் |
| நிர்மாணிக்கப்பட்டுள்ள தாவர இல்லத்தின் உள்ளே திட்டமிட்ட படி தாவரங்களை அமைத்தல் | *1.5* | தாவரவியல் பூங்காக்கள் நிதியம் |
| மா ஓயா நீர் விநியோகத் தொகுதியை இற்றைப்படுத்துதல் | *2* | தாவரவியல் பூங்காக்கள் நிதியம் |
| உள்ளக வீதி அபிவிருத்தி | *4* | தாவரவியல் பூங்காக்கள் நிதியம் |
| உயிர் வாயு அலகொன்றுடனான கழிவு முகாமைத் தொகுதி ஒன்றை அமைத்தல் | *2.5* | கூட்டு நிதியம் |
| உணவகத்திற்கு கழிவு நீர் அகற்றல் தொகுதியோன்றை அமைத்தல் | *3* | தாவரவியல் பூங்காக்கள் நிதியம் |
| காணி அபிவிருத்தியும் ஏனைய பேணுகை நடவடிக்கைகளும் | *5* | தாவரவியல் பூங்காக்கள் நிதியம் |

| | | |
|---|---|---|
| தாவர வளர்ப்பு நிகழ்ச்சித்திட்டமும் தாவரச் சேகரிப்புகளை மேம்படுத்துதலும் தாவர வெளிவாரிப் பேணுகை நிகழ்ச்சித் திட்டங்களை அமுல்படுத்துதலும் | *1.175* | தாவரவியல் பூங்காக்கள் நிதியம் |
| தாவரங்களுக்கு லேபலிடல், விஷேட தாவரங்கள் குறித்து விபரமான லேபல்களைப் பொருத்துதல் | *1* | தாவரவியல் பூங்காக்கள் நிதியம் |
| தாவரங்கள் குறித்த தகவல்களைப் பொதுமக்களுக்கு வழங்கல் | *1* | தாவரவியல் பூங்காக்கள் நிதியம் |
| உத்தியோகபூர்வ இல்ல நிர்மாணம் | *6* | தாவரவியல் பூங்காக்கள் நிதியம் |
| வாகனத் தரிப்பிடம் அமைத்தல் | *1* | தாவரவியல் பூங்காக்கள் நிதியம் |
| **தேவையான மொத்த ஒதுக்கீடு** | ***36.475*** | |
| **கல்வி மற்றும் பயிற்சி நிலையம்** | | |
| பூமி அலங்கார முறைமைகள் பற்றிய மூன்று மாத சான்றிதழ் கற்கையை நடாத்துதல் | *0.25* | தாவரவியல் பூங்காக்கள் நிதியம் |
| பூமி அலங்கார அபிவிருத்தி உதவியாளர்களுக்கான தொழில் தகைமைச் சான்றிதழ் - ஒரு வருட டிப்ளோமாப் பாட நெறிக்கு (NVQ- level 4) மாணவர்களை இணைத்துக்கொள்ளல் | *0.25* | தாவரவியல் பூங்காக்கள் நிதியம் |
| மத்திய நிலையத்தின் கழிவு நீர் அகற்றல் தொகுதியை மேம்படுத்தல் | *2.5* | தாவரவியல் பூங்காக்கள் நிதியம் |
| **தேவையான மொத்த ஒதுக்கீடு** | ***3*** | |
| **பூச்செடிச்செய்கை அபிவிருத்தி** | | |
| ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி, பூச்செடியியல் அலகின் இரசாயனகூடங்களின் பேணுகை | *8* | கூட்டு நிதியம் |
| பூச்செடியியல் பற்றிய பிரசுரங்கள், பத்திரிகைகள் வெளியிடல் | *1* | தாவரவியல் பூங்காக்கள் நிதியம் |
| பூ வளர்ப்போரது இயலுமை விருத்திக்கான பயிற்சி நிகழ்ச்சிகள் | *2* | தாவரவியல் பூங்காக்கள் நிதியம் |
| கண்காட்சிகள் / ஊக்குவிப்பு நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்தல் | *1* | தாவரவியல் பூங்காக்கள் நிதியம் |
| கூட்டங்களுக்கு சமூகமளித்தல் மற்றும் நாற்று மேடை முகாமைக்கான ஆலோசனைகளை வழங்கும் பொருட்டான பயணங்கள் | *2* | கூட்டு நிதியம் |
| பொருட்கள் வழங்கி பூ வளர்ப்போருக்கு உதவல் | *10* | தாவரவியல் பூங்காக்கள் நிதியம் |
| நாற்று மேடைகளையும் பயிரிடு பிரதேசங்களையும் அபிவிருத்தி செய்தல் | *5.5* | தாவரவியல் பூங்காக்கள் நிதியம் |
| கன்று விற்பனைக்கும் நடுவதற்கும் தேவையான பொருட்களைக் கொள்வனவு செய்தல் | *3* | தாவரவியல் பூங்காக்கள் நிதியம் |
| **தேவையான மொத்த ஒதுக்கீடு** | ***32.5*** | |
| **தேசிய தாவரக்கயம்** | | |
| ஆய்வுகள், தாவரக் கண்டாய்தல்கள் | *2* | தாவரவியல் பூங்காக்கள் நிதியம் |
| தேசிய தாவரக்கயத்தின் மாதிரிச் சேகரிப்புகளை இற்றைப்படுத்தலும் ஏனைய பேணுகை நடவடிக்கைளும் | *4* | தாவரவியல் பூங்காக்கள் நிதியம் |
| **தேவையான மொத்த ஒதுக்கீடு** | ***6*** | |
| **மீகல்லாவ பசுமை இல்ல பயிற்சி நிலையம்** | | |
| பழைய கட்டிடப் புனரமைப்பு | 3 | கூட்டு நிதியம் |

| | | |
|---|---|---|
| புதிய தளபாடக் கொள்வனவு | *0.5* | கூட்டு நிதியம் |
| நாற்று மேடைகள் மற்றும் பயிரிடு பிரதேசங்களை அபிவிருத்தி செய்தல் | *1.5* | கூட்டு நிதியம் |
| **தேவையான மொத்த ஒதுக்கீடு** | **5** | |
| **பிரதான பணிமனை** | | |
| பிரதான பணிமனையின் வசதிகளை மேம்படுத்தல் | *10.725* | தாவரவியல் பூங்காக்கள் நிதியம் |
| பயிற்சி நிகழ்ச்சிகள் | ***7.5*** | தாவரவியல் பூங்காக்கள் நிதியம் / கூட்டு நிதியம் |
| கட்டிடங்கள், உத்தியோகபூர்வ இல்லங்கள், இயந்திரங்கள் மற்றும் வாகனப் பழுதுபார்த்தல் | ***0.4*** | கூட்டு நிதியம் |
| புதிய கருவிகள், அலுவலக உபகணங்கள் மற்றும் இயந்திரங்கள் கொள்வனவு செய்தல் | ***0.1*** | கூட்டு நிதியம் |
| **மொத்த ஒதுக்கீடு** | *18.725* | |
| புதிய வேலைத் திட்டங்களுக்கான முழுச் செலவினம் | ***300.05*** | |